பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2033 மார்கழி 19 வெள்ளிக்கிழமை (03-01-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:38

# புலிகளின் பயமுறுத்தல் குறையும் வரை பாதுகாப்பு வலயத்தில் வாபஸ் இல்லை!

## தலதா மாளிகையில் இராணுவத் தளபதி

கண்டி,ஜனவரி3

**ஏதாவது ஓரளவுக்கு பாதுகாப்பு வலயங்களை விட்டுக்கொடுக்க நாம் தயாரானாலும் புலிகளின் பயமுறுத்தல் குறையும் வரை அது இடம்பெற முடியாது.**

**- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல.**

கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு வியாழக்கிழமை சென்று வழிபாட்டில் கலந்துகொண்ட பின் அஸ்கிரிய, மல்வத்த பௌத்த பீடங்களின் மகாநாயகர்களையும் சந்தித்து அவர் உரையாடினார். தலதாமாளிகையில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து

(2ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். தளபதி பொன்சேகா இடமாற்றப்பட மாட்டார்!

### பாதுகாப்பு அமைச்சு செயலர் கூறுகிறார்

கொழும்பு,ஜன.3

வடக்கு இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவை அப்பதவியிலிருந்து அகற்றவோ அல்லது அவரை இடமாற்றவோ எந்த ஒரு தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ கூறினார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கடற்படையில் கட்டாயமாக இடம்பெறவேண்டிய இடமாற்றங்களே இடம்பெற்றிருப்பதாகவும் அவர் சொன்னார். பாதுகாப்பு அமைச்சில் இராணுவத்தின் 'வெப்' தளத்தை ஆரம்பித்துவைத்த பின்னர் அவர் பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தினார். (ஐ)

## இந்திய மீனவர் ஊடுருவல் பற்றி தாய்லாந்தில் புலிகள் பேசுவர்

வடக்கு கடற்பரப்பில் ஊடுருவும் இந்திய மீனவர்கள் வடபகுதி மீனவர்களுக்கு இழைக்கும் அநீதிகள் குறித்து எதிர்வரும் 6ஆம் திகதி தாய்லாந்தில் இடம்பெறவிருக்கும் அரசு - புலிகள் பேச்சின்போது பிரஸ்தாபிக்கப்பட விருக்கின்றது.

பூநகரி, பள்ளிக்குடாக் கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் 36 பேரை பூநகரி மீனவர்கள் வழிமறித்துப் பிடித்து கிளிநொச்சி அரசஅதிபரிடம் கையளித்திருப்பது தெரிந்ததே.

இந்திய மீனவர்களின் இது போன்ற அத்துமீறல்களை நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பூநகரி மீனவர்கள் விடுதலைப் புலிகளிடம் கோரியிருக்கின்றனர்.

இந்திய மீனவர்களின் ஊடுருவல்கள் குறித்து அடுத்த கட்டப் பேச்சின் போது அரசுத் தரப்புடன் பேசி ஒரு முடிவைக்காண்பதாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் மீனவர்களுக்கு உறுதி அளித்துள்ளனர்.

இந்த உறுதிமொழியைப் பெற்றுக்கொண்ட பின்னர், இந்தியமீனவர்கள் 36 பேரையும் விடுதலைப்புலிகளின் மன்னார் மாவட்ட தளபதி லக்ஸ்மனிடம் பூநகரி மீனவர்கள் ஒப்படைத்தனர். நேற்றிரவு அந்த மீனவர்கள் படகுகளுடன் கடல்வழியாக இந்தியா செல்ல அனுமதிக்கப்பட்டனர். (ஐ-3)

## வலி.வடக்குப்பகுதி மக்களின் போராட்டம் இன்று ஆரம்பம்!

வலி.வடக்கு,ஜன.3

வலி.வடக்கில் உள்ள தங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில்களில் ஈடுபட அனுமதிக்குமாறு கேட்டு இப்பிரதேச மக்கள் இன்று மறியல் மற்றும் உண்ணாவிரதப் போராட்டங்களை ஆரம்பிக்கின்றனர்.

தெல்லிப்பழையில் உள்ள வலி. வடக்கு பிரதேச செயலகத்தின் வாயில் அருகே இன்று காலை முதல போராட்டம் ஆரம்பமாகும்.

பிரதேச செயலக பணிகள் பாதிகப்படாதவாறு போராட்டம் அமைதியாக இடம்பெறும் என்று வலி.வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்திருக்கிறது.

இன்று ஆரம்பமாகும் போராட்டம் சனி, ஞாயிறு கழித்து திங்கட்கிழமை முதல் தொடர்ந்து இடம்பெறும்.

வலி.வடக்கு மீள்குடியமர்வு மற்றும் விவசாயம் கடற்றொழில் என்பன தொடர்பாக அரசு தெளிவான - திட்டவட்டமான - ஒரு பதிலைத் தரும்வரை தமது போராட்டம் ஓயாது என்று பொதுமக்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இன்றைய போராட்டத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ.3-86)

### காட்டில் பெண்ணின் சடலம்!

வவுனியா,ஜன.3

வவுனியாவில் கடந்த மாதம் 29 ஆம் திகதி காணாமற்போனதாகக் கூறப்பட்ட இளம்பெண் நேற்று சடலமாக மீட்கப்பட்டார். சிவலக்ஷ்மி சிவசுப்பிரமணியம் (வயது 23) என்பவரின் சடலமே மீட்கப்பட்டது.

காட்டுப்பகுதியில் ஊதிய நிலை

(14ஆம் பக்கம் பார்க்க)

### பிரதமரின் செயலாளருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜன.3

வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோரின் பாதுகாவலர் சங்கத்தினர் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோனை கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### 2 மீனவர்களும் யாழ்.ஆஸ்பத்திரியில்!

தொண்டமனாறு கடலில் கடற்படைப் படகு மோதியதில் படுகாயமடைந்து பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த இரு மீனவர்களும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

தொண்டமனாறு காட்டுப்புலத்தைச் சேர்ந்த எஸ். சோதிலிங்கம், அவரது மகனான சோ.சாண்டியன் ஆகிய இருவருமே கடற்படையினரால் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.(ஐ-12)

### அரச அதிபரின் உறுதிமொழியை அடுத்து

## பொன்னாலை மக்களின் மறியல் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜன.3

பொன்னாலையில் பொதுமக்கள் மீளக்குடியமர்வது தொடர்பாக யாழ். அரசஅதிபர் அளித்த உறுதிமொழியை அடுத்து மறியற்போராட்டத்தை ஒரு வார காலத்திற்கு தாங்கள் இடைநிறுத்துவதாக பொன்னாலை மக்கள ஒன்றியம் அறிவித்திருக்கிறது.

பொன்னாலைப் பகுதியிலிருந்து கடற்படையினரை வெளியேற்றி, அப்பகுதியில் பொதுமக்களை மீளக்குடியமர்த்துமாறுகோரி, சங்கானைப் பிரதேசசெயலகம் முன்பாக மறியற்போராட்டம் மேற்கொண்டுவரும் பொதுமக்கள் நேற்று யாழ்.அரசஅதிபரை சந்தித்தனர்.

பொன்னாலை - கீரிமலை வீதிக்கு

(2ஆம் பக்கம் பார்க்க)

### வடமராட்சி கடலில் செவ்வாய் இரவு

## காணாமற்போன 2 மீனவர்கள் மாதகல் கடலில் மீட்கப்பட்டனர்!

யாழ்ப்பாணம்,ஜன.3

கடந்த 31 ஆம் திகதி செவ்வாய் இரவு வடமராட்சிக் கடலில் மீன்பிடிக்கச் சென்றவேளை காணாமற்போன இரண்டு மீனவர்கள் நேற்று வியாழக்கிழமை மாதகல் கடலில் வைத்து அப்பகுதி மீனவர்களினால் மீட்கப்பட்டனர்.

இவர்கள் பயணம் செய்த படகு இயந்திரக் கோளாறு காரணமாகவும் கடும் காற்று கடற்கொந்தளிப்பினாலும் மாதகல் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தவேளை, அப்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மாதகல் பகுதி மீனவர்கள் விரைந்து உதவிக்கு வந்து இவர்களை மீட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. பின்னர் இவர்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்களது மீனபிடிப்படகை மாதகல் கடற்படையினர் பொறுப்பேற்றுள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி

(2ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றும் பேசும் புலிகளை நம்பமுடியாது!

### எங்களை ஓரங்கட்டுகிறார்கள் என்கிறார் ஹக்கீம்

லண்டன்,ஜன.3

உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றுமாகப் பேசுவதை புலிகள் இயக்கம் தவிர்த்துக்கொள்ளவேண்டும். தமது நம்பகத்தன்மையைப் பாதிக்கும் விதத்தில் செயற்படுவதையும், சமாதான முயற்சிகளில் முஸ்லிம்களை ஓரங்கட்ட [illegible]தையும் அவர்கள் [illegible]வேண்டும்.

[illegible] தெரிவித்திருக்கிறார் [illegible] காங்கிரஸ் தலை[illegible]னை ரவூப ஹக்கீம். பி.பி.ஸி தமிழோசைக்கு நேற்று வழங்கிய பேட்டியிலேயே மேற்படி சாரப்பட அவர் கருத்து வெளியிட்டார். அவர் கூறிய விடயங்கள் வருமாறு:-

புலிகள் இயக்கம் உள்ளத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றுமாகப் பேசுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் தரப்பில் புலிகள் நம்பகத்தன்மையைப் பாதிக்காத விதத்தில் புலிகளின் ஊடகச் செய்திகள் அமைய வேண்டும்.

முஸ்லிம்களின் அரசியல் தலைமையை நேர்மையாக முன்னெடுத்துச் செல்பவன் நான். எமக்குத் தரப்பட்டிருக்கும் புலிகளின் உத்தரவாதம் தொடர்பாக சரியான நம்பகத்தன்மை பேணப்பட வேண்டும்.

எங்களின் உரிமைகள் குறித்தும் ஊடகங்கள் ஊடாக கருத்து வெளியிடும்போது நேரடியாகவோ மறைமுகமாகவோ எம்மைச் சாட முனைவதும் விமர்சிப்பதும் வரவேற்கத்தக்கதல்ல.

தாங்கள் ஏற்கனவே ஏற்றுக்கொண்

(13ஆம் பக்கம் பார்க்க)

## உணவகங்களில் சீர்கேடு: காய்ச்சலுக்கு ஒரு காரணம்

### சுகாதாரப்பகுதி எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.3

குடாநாட்டில் சிகிச்சைக்கு கட்டுப்படாமல் பரவிவருகின்ற காய்ச்சல்களுக்கு உணவகங்களில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகளும் ஒரு காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக யாழ்மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.மரியதாசன் அறிவித்திருக்கின்றார்.

சுகாதார சீர்கேடுகள் நிறைந்த உணவகங்களில் உணவுவகைகளை உட்கொள்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டிருக்கின்றனர்.

இது தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரி நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.குடாநாட்டில் - குறிப்பாக மாநகர சபை எல்லைக்குட்பட்ட சில பகுதிகளில் - ஆட்கொல்லி நோய்களான டெங்கு, கொலரா, நெருப்புக் காய்ச்சல் மற்றும் வைரஸ்காய்ச்சல் போன்ற நோய்கள் உண்ணும் உணவு, பருகும் நீர் போன்றவற்றினால் பரவுவதாக ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்ட போதிலும், குறிப்பாக உணவு தயாரிக்கும் - விற்பனை செய்யும் - நிலையங்களின் சுகாதாரச் சீர்கேட்டினாலேயே மேற்படி நோய்கள் பரவிவரும் சாத்தியம் அதிகரித்துள்ளதாக தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் இயங்கும் உணவு உற்பத்தி மற்றும் விற்பனை நிலை

(2ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்.

காய்ச்சல் நோ[illegible]ர்களுக்கு சிகிச்சை அ[illegible]க்கும்

# [illegible]ஸ்பத்திரி டாக்டர்கள், ஊழியர்களுக்கு 'தைபோயிட்' தடுப்பு மருந்து வழங்கப்படும்

யாழ்ப்பாணம்,ஜன.3

குடாநாட்டில் தற்பொழுது வேகமாகப்பரவிவரும் நெருப்புக் காய்ச்சலுக்கு (தைபோயிட் காய்ச்சல்) சிகிச்சை மேற்கொள்வோர், அந்த நோயினால் பாதிக்கப்படுவதைத் தடுக்கும் முன் நடவடிக்கையாக யாழ்போதனாவைத்தியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருககும் 'தைபோயிட் தடுப்பு மருந்து' வழங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது யாழ்.குடாநாட்டில் வேகமாகப்பரவி வரும் காய்ச்சலில், 65சதவீதமான நோயாளர்கள், இதுவரை இனங்காணப்படாத வைரஸினால் பாதிக்கப்பட்ட அதேவேளை, சுமார் 15வீதமான நோயாளர்களில் ஒரு வகைப் 'பஸிலஸ்' இனப் பங்கஸினால் உருவான 'தைபோயிட்' காய்ச்சலே என்பது அறியப்பட்டுள்ளது. ஆயினும், தைபோயிட் காய்ச்சலுக்கான சிகிச்சை முறைகள்கூட பெரும்பாலும் வெற்றியளிக்கவில்லை.

இந்நிலையில், நோய்த் தடுப்புக்கான நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு கட்டமாக, நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கின்ற வைத்தியர்கள் உட்பட வைத்தியசாலை ஊழியர்கள் அனைவருக்கும் 'தைபோயிட்' தடுப்பு மருந்து வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளை, தற்போது 'வைரஸ் காய்ச்சல்' தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வரும் பொதுச் சுகாதார சேவைகள் தொடர்பான உயிரியல்துறை நிபுணர் டாக்டர் பீரிஸ் அடங்கிய குழுவினரே மேற கொள்ளவுள்ளனர் எனத் தெரிய வருகிறது. (ஐ-9)

## கல்கி பகவானின் சீடர் வருகை

யாழ்ப்பாணம்,ஜன.3

இந்தியாவில் தமிழ் நாட்டில் உள்ள கல்கி பகவானின் அமைப்பான 'சுவர்ணயுக' அமைப்பைச் சேர்ந்தவரும் பகவானின் சீடருமான ராஜேஸ் பகவத் தாஸா யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியில இன்று காலை 9மணிக்கு நடைபெறும கருத்தரங்கில் 'ஆன்மீகத்தில் கல்வி' என்ற விடயம் பற்றி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அவர் கருத்துரை வழங்குவார்.

நாளை மாலை 5.30மணிக்கு நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் அவர் ஆன்மீகச் சொற்பொழிவாற்றுவார். எதிர்வரும் 5ஆம் திகதி நயினாதீவுக்குச் செல்லும் அவர், அங்குள்ள பாடசாலைகளுக்குச சென்று மாணவர்களைச் சந்திப்பார். அவர்களுக்கு ஆன்மீக கல்வி பற்றி கருத்துரை வழங்குவார்.

இவருடன் தொடர்புகொள்ள வேண்டியவர்கள் 'மணியர்பதி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில்' என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## உரும்பிராய் பாடசாலையில் யாழ்.நீதிவான் விசாரணை

### பலரது வாக்குமூலங்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.3

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய மாணவியின் மரணம் தொடர்பாக யாழ்நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா நேற்று அந்தப் பாடசாலைக்கு நேரடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

இந்த மர்ம மரணம் தொடர்பாக ஏற்பட்டுள்ள சில சந்தேகங்களை நிவர்த்தி செய்ய நேரடி விசாரணை நடத்த அனுமதிக்கவேண்டும் என்று சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். ஸ்ரீராஜேஸ்வரன் யாழ். நீதிமன்றத்தில மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட யாழ்நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, சட்டவைத்திய அதிகாரி மற்றும் கோப்பாய் பொலீஸார் ஆகியோருடன் நேற்று மாலை பாடசாலைக்குச் சென்றார்.

உயிரிழந்த மாணவியை கிணற்றில இருந்து வெளியே எடுத்தவர்கள், மாணவியின் பெற்றோர், சம்பவ தினம அங்கு வந்தவர்கள் ஆகியோரை நீதிவான் விசாரணை செய்தார்.

மாணவியின் கழுத்து நெரிக்கப்பட்டமைக்கான காரணத்தை அறியும நோக்கத்துடன் கிணற்றில் இருந்து எவ்வாறு சடலம் வெளியே எடுக்கப்பட்டது என்ற விடயம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

மாணவியின் வயிற்றில் கயிறு போட்டு சடலம் வெளியே எடுக்கப்பட்டதாக அங்கு சாட்சியம் அளிக்கப்பட்டது.

சம்பவதினம் காலையில் பிரஸ்தாப மாணவியுடன் உரையாடியவர்கள் யார் என்பது குறித்தும் விசாரணை நடத்தப்பட்டது.

பாடசாலையில் இடம்பெற்று வரும கட்டட வேலைகளை மேற்பார்வை செய்பவருடன் சிறுமி கதைத்ததாக தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து கட்டட மேற்பார்வையாளரையும் கட்டட ஒப்பந்தக்காரரையும் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3)

## சைக்கிள் உரிமத்தகடுகள் விநியோகத்தில் முறைகேடு

### நல்லூர் பிரதேச சபைப் பிரிவில்

நல்லூர்,ஜன.3

நல்லூர் பிரதேச சபை, சைக்கிள் உரிமத் தகடுகள் வழங்கும் பணியினைத் தீவிரப்படுத்தியிருக்கிறது. கடந்த சில தினங்களாக திருநெல்வேலி சந்தைப் பகுதியில் சைக்கிள்கள் வழிமறிக்கப்பட்டு உரிமத் தகடுகள் வழங்கப்பட்டன. முடிவடைந்த ஆண்டிற்கான (2002) இலக்கத் தகடுகளே விநியோகிக்கப்பட்டன. புதிய ஆண்டிற்கான இலக்கத் தகடுகள் என எண்ணி அவற்றை வாங்கியோர் ஏமாறநேர்ந்தது.

[illegible]பொதுமக்களின் முறைப்பாட்டை[illegible]த் தொடர்ந்து, ந[illegible]ல்லூர் பிரதேச [illegible]பை அ[illegible]காரி ஒருவருடன் 'உதயன்' செய்தியாளர் [illegible]வர் தொடர்பு கொண்டு இதுபற்றிக் கேட்டார்.

"முடிவடைந்த ஆண்டிற்கான இலக்கத்தகடுகள் இவ்வாண்டு மார்ச் 31வரை செல்லுபடியாகும். சைக்கிள் உரிமத்தகடு பரிசோதனை இக்காலப பகுதிவரை மேற்கொள்ளப்படமாட்டாது. அதன் பின்னரே புதிய ஆண்டிற்கான இலக்கத்தகடுகளை பிரதேச சபை விநியோகிக்கும்" - என்று அந்த அதிகாரி விளக்கமளித்தார்.

உரிய காலப்பகுதியில் உரிமத் தகடுகளை விநியோகிக்காமல், ஆண்டின் இறுதி நாள்களில் அவற்றை அவசர அவசரமாக விநியோகித்த சபையின் நடவடிக்கை சைக்கிள் உரிமையாளர்களிடையே விசனத்தை ஏற்படுத்தியது. (ஐ-ரி)

## பாதுகாப்பு வலயச் சிக்கல்; பிரதமர் ரணில் ஆலோசனை

### சிங்கப்பூரிலிருந்து திரும்பிய கையோடு

கொழும்பு,ஜன.3

சிங்கப்பூர் சென்றுவிட்டு நேற்று முன்தினம் மாலை நாடு திரும்பிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முப்படைத்தளபதிகள் மற்றும் மூத்த அமைச்சர்களுடன் நீண்ட நேரம் ஆலோசனை கலந்ததாக செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்தது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, அமைச்சர் மிலிந்த மொறகொட, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, வடக்கு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோரும் இக்கூட்டத்தில் பங்குபற்றியதாக சிரேஷ்ட அர[illegible] அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி அந்த செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டது. (ஐ-3)

## உணவகங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யங்களில் இனங்காணப்பட்ட சுகாதார சீர்கேடுகளைக் களைய உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென எம்மால் பிரத்தியேகமாகக் கோரப்பட்டபோதிலும், நிறுவன உரிமையாளர்கள் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் அவற்றினைச் செய்யத் தவறியிருப்பின் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அந் நிலையங்களை 'சீல்' செய்து மூட வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே, சகல உணவு உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்கள் அதியுச்ச சுகாதார நிலையைப் பேணுமாறும், தவறின் அவற்றிக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளல் தவிர்க்க முடியாததாகும் எனவும் இத்தால் கேட்டுக் கொள்கின்றேன்.

நோய்த் தடுப்பு நடவடிக்கையின் முதற்கட்டமாக உணவகங்கள், தேநீர்க்கடைகள் போன்றவை தகுதி வாய்ந்த குழுவினரின் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, உயிர் கொல்லி நோய்களை பூண்டோடு ஒழிக்க உரிய நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதென்பதை மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொன்னாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்பக்கமாக தமது நிலைகளை நகர்த்தி பொன்னாலை வீதியை பொது மக்கள் பாவனைக்கு விடவும், வீதிக்கு வெளியே பொதுமக்களை மீளக்குடியமர அனுமதிக்கவும் கடற்படையினர் இணக்கம் தெரிவித்திருக்கின்றனர் என்றும் -

ஒருவார காலத்திற்குள் இவற்றை நடைமுறைப்படுத்த அவர்கள் உறுதியளித்துள்ளதாகவும் -

யாழ்.அரச அதிபர் மறியற்போரில் ஈடுபட்டுள்ளோரிடம் தெரிவித்தார்.

இந்த உறுதிமொழியை அடுத்து மறியற்போராட்டத்தைக் கைவிடுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

எனினும் -

நேற்று நான்காவது நாளாக பிரதேச செயலகம் முன் மறியல் நீடித்தது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், ந.ரவிராஜ் ஆகியோர் நேற்று அங்கு வருகைதந்து மறியற்போரில் ஈடுபட்டிருந்த மக்களுடன் உரையாடினர்.

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்.பி. சந்திரசேகரா, கடற்படையினருடன் தொடர்புகொண்டதையடுத்து கடற்படையினர் படகை பொலீஸாரிடம் ஒப்படைக்க இணங்கினர். பொலீஸார் இப்படகை நீதிமன்றத்திடம் பாரப்படுத்தவுள்ளனர். படகு உரிமையாளர்கள் நீதிமன்றத்திடம் அப்படகை பெற்றுக் கொள்ளமுடியும் என ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

தொண்டமனாறுப் பகுதியில் கடற்படைப்படகு மீனவர் படகு ஒன்றை மோதிய சம்பவத்தில் காணாமற்போன மீனவரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு கடற்படையினர் அனுமதியளித்ததையடுத்து நேற்று நண்பகல் ஏழு படகுகளில் மீனவர்கள் கடலுக்குச் சென்று தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். நேற்று மாலை வரை மீனவர் கண்டுபிடிக்கப்படவில்லை. (ஐ-173-8)

# பல்கலை மாணவர் போராட்டத்தால் அம்பாறை மாவட்டம் ஸ்தம்பிதம்!

### மூன்று கோரிக்கைகளை முன்வைத்து வீதி மறியல்; அடையாள உண்ணாவிரதம்

நிந்தவூர்,ஜன.3

முஸ்லிம் சமூக[illegible]தின் நலனுக்காக மூன்று கோரிக்கைகளை முன் [illegible]வைத்து [illegible]கிழக்கு பல்கலைக்கழக மாண[illegible] [illegible]ம் [illegible]ம் இ[illegible]ணந்து [illegible] நடத்[illegible] [illegible]றியல், அடை[illegible] உண்[illegible] [illegible] போராட்டம் [illegible]ம் பரபர[illegible]ற்படுத்தி அம்[illegible]றை மாவட்டத்தை[illegible] அதிர [illegible]த்து.

கல்முனைக்கும் அக்கரைப்[illegible]ற்றுக்குமிடையிலான வாகனப்போக்குவரத்துக்கள் முற்றாகத் தடை[illegible] [illegible]தால் ஏற்பட்ட நெருக்கடியைத் [illegible] அக்கரைப்பற்றுப் பொலீஸாரு[illegible] [illegible]லகம் அடக்கும் பொலீஸ் பிரிவினரும் விரைந்துவந்து மேற்கொண்ட முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. [illegible]ராட்டம் திட்டமிட்டபடியே மூன்று [illegible]ணி நேரம் நடந்தது.

ஒலுவிலில் உள்ள தென்கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு முன்னால் செல்லும் வீதியில் அமைந்துள்ள களியோடைப் பாலத்தை ஐந்நூற்றுக்கும மேற்பட்ட பல்கலைக்கழக மாணவ, மாணவியர்களும் பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் நேற்றுக் காலை முற்றுகையிட்டு மறியலில் ஈடுபட்டனர்.

பாலத்தைக் கடந்து செல்ல முடியாத நிலையில் பாலத்தின் இரு பகுதிகளிலும் வாகனங்கள் ஒன்றன் பின் ஒன்றாக நீண்ட வரிசையில் ஸ்தம்பித்து நின்றன. பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

விடயம் அறிந்ததும் அக்கரைப்பற்றுப் பொலீஸாரும் கலகம் அடக்கும் பொலீஸ் பகுதியினரும் அங்கு விரைந்து வந்தனர்.

போராட்டத்தை நிறுத்தி வீதிப் போக்குவரத்துக்கு வழிவிடுமாறு அக்கரைப்பற்று பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரீ.எம்.ஐ.எம்.புஹாரி மாணவர்களிடம் எவ்வளவோ சொல்லி வேண்டுகோள் விடுத்தார். மாணவர்கள் மறுத்து விட்டார்கள்.

"போக்குவரத்து தடைப்பட்டிருப்பதை விட முஸ்லிம் சமூகத்தின் உரிமைப் பிரச்சினை, உயிர்ப் பிரச்சினை முக்கியமானது. அதைச் சர்வதேச சமூகமும் அறிந்துகொள்ள வேண்டும். எங்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். தயவுசெய்து மன்னித்துக்கொள்ளுங்கள்." என்று பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கூறிவிட்டு மாணவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

"சமஷ்டி ஆட்சியில் முஸ்லிம்களுக்கு அரசியல் உரிமை வேண்டும்."

"குருட்டு அரசே எங்கள் பக்கமும் உன் கண்கள் விழிக்கட்டும்!"

"வேண்டும்வேண்டும், சம உரிமை வேண்டும்." என்பன போன்ற வாசகங்கள் கொண்ட சுலோக அட்டைகளைப் பலரும் தாங்கிய வண்ணமே வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுலோகங்களைக் கோஷிக்கவும் செய்தனர்.

மாணவ சமூகத்தின் சார்பில் கிழக்குப் பல்கலைக்கழக அரசியல் சங்கத்தின் தலைவர் முஸ்னத் அஹமட சரீப்தீன், மாணவர் பேரவைப் பத்திராதிபர் ஏ.எல்.தவம், மாணவர் பேரவைக் கலை கலாசார பீடத் தலைவர் மௌலவி எம்.எச்.எம். இத்ரீஸ், ஜனநாயக மாணவர் பேரவைத் தலைவர் எம்.எம்.எம்.நதீர் உட்பட பலர் போராட்டத்தை முன்னின்று நடத்தினர்.

காலை 8.30 மணிக்கு ஆரம்பித்த போராட்டத்தை குறித்தபடி பகல் 11.30 இற்கு நிறைவு செய்தனர். (ஐ-12)

## புலிகளின் பயமுறுத்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறியதாவது:-

புலிகள் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து விலகிச்செல்லுமாறு படையினரைக் கேட்கின்றனர். நாம் ஏற்கனவே யாழ்நகரில் அரச கட்டடங்கள் பலவற்றையும் எமது கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்திருக்கின்றோம். அப்பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர வேண்டும் எனக் கோரும் புலிகளின வேண்டுகோளின் பேரில் சில பகுதிகளை விட்டுக்கொடுப்பதில் முரண்பாடுகள் இருந்து வருகின்றன. ஏதாவது ஓர் அளவுக்கு உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களை விட்டுக் கொடுக்க நாம் தயாராகினாலும் புலிகளின் பயமுறுத்தல் குறையும்வரை அது இடம்பெற இயலாது.

இவ்வாறு சுமுகமான நிலை உருவாகும் பொழுது புலிகள் தம்வசமுள்ள ஆயுதங்களை சமரச குழு முன்னிலையில் ஒப்படைப்பதன் மூலம் இராணுவத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான சந்தேகம் மற்றும் பயமுறுத்தல்கள் குறைய[illegible]முடைடு.

இராணுவம் எப்பொழுதும் சமாதான முயற்சிக்கு இடையூறாக இருக்கமாட்டாது.

இதற்கிடையில், உயர் பாதுகாப்பு வலயமாகக் கருதப்படும் பிரதேசங்கள் பொதுமக்களின் நலனுக்காக விடுபடும் பொழுது அவற்றை பரிபாலிக்கவும் கண்காணிக்கவும் சுயமாகத் தொழிற்படக்கூடிய அமைப்புக்கும் நாம் உதவலாம்.

- இவ்வாறு கூறினார் அவர்.

மல்வத்தை பீடாதிபதி றம்புக்வெல்ல ஸ்ரீ விபஸ்ஸி பேசுகையில -

புலிகள் தொடர்பாக மிகுந்த அவதானிப்புடன் இராணுவம் தொழிற்பட வேண்டும் என்றார்.

அஸ்கிரிய பீடாதிபதி வண.உடுகம ஸ்ரீ புத்தரக்பீதேரோ பேசுகையில -

"புலிகளை அரசியலில் தொடர்பு கொள்ள வகை செய்யப்பட வேண்டும் தேர்தலில் வந்து போட்டியிடவும் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்" - என்றார். தளபதியுடன் மத்திய பிரதேச இராணுவக்கட்டளை அதிகாரி கேணல் டிரத்னாயக்கவும் சென்றிருந்தார். (ஐ)

ஐக்கிய அரபுக் குடியரசு அறிவிப்பு:

## களவாக இருக்கும் 5,000 இலங்கையர் வெளியேற 4 மாத மன்னிப்புக் காலம்

துபாய்,ஜன.3

சட்ட விரோதமாகக் குடியேறியிருக்கும் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் வெளிநாட்டவர்கள் ஐக்கிய அரபுக் குடியரசிலிருந்து வெளியேற்றப்படவிருக்கின்றனர். இவர்களில் 5ஆயிரம் பேர் இலங்கையர்களாவர்.

இவர்கள் அனைவரும் தண்டனை எதுவுமின்றி வெளியேற ஐக்கிய அரபுக்குடியரசு நான்கு மாத மன்னிப்புக் காலத்தை அறிவித்திருக்கிறது. ஜனவரி முதலாம் திகதி முதல் மன்னிப்புக்காலம் நடைமுறைக்கு வந்திருக்கிறது.

சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களில் 40 ஆயிரம் பேர் இந்தியர்களாவர். 25 ஆயிரம் பேர் பாகிஸ்தானியர்கள்.

1996 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட இவ்வாறான மன்னிப்புக காலத்தில் சுமார் 2லட்சம் சட்ட விரோத குடியேற்றக்காரர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தை விட்டு வெளியேறினர். (ஐ)

## பல்கலை அனுமதியில் பாதிக்கப்பட்ட மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,ஜன.3

பல்கலைக்கழகத் தெரிவில் கோட்ட ரீதியாக பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் நடைபெறவுள்ளது. எனவே, இக்கலந்துரையாடலில் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய பாதிக்கப்பட்ட மாணவர்களைக் கலந்துகொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ஒ)

# 11ஆயிரம் படையினரை அமெரிக்கா வளைகுடாப் பகுதிக்கு நகர்த்தியது!

வாஷிங்ரன்,ஜன.3

ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள் ஈராக்கில் தொடர்ந்து சோதனைகளை நடத்தி வருகின்ற போதும், ஈராக் மீதான தாக்குதலுக்கான ஏற்பாடுகளை அமெரிக்கா தீவிரப்படுத்தி வருகின்றது. அதன் ஒரு கட்டமாக பாலைவன யுத்தத்தில் பயிற்சி பெற்ற 15ஆயிரம் படையினரை வளைகுடாப பகுதிக்கு அந்த நாடு அனுப்பி வைத்துள்ளது.

ஏற்கனவே வளைகுடாப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 60 ஆயிரம் படையினருக்கு மேலதிகமாக இவர்கள் அங்கு அனுப்பப்படுகின்றனர். இது தவிர துருக்கி, கடார், ஓமான், பக்ரைன் ஆகிய நாடுகளில் 400இற்கும் மேற்பட்ட போர் விமானங்கள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. வளைகுடா கடற்பகுதியில் விமானந்தாங்கிக் கப்பல்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

குவைத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அமெரிக்கத் துருப்புக்கள் அங்கு ஈராக் போருக்கான பயிற்சிகளிலும் ஈடுபட்டுவருகின்றன. அமெரிக்காவின் 'பி-1' ரக குண்டு வீச்சு விமானங்களும் 'எவ்-15' ரக தாக்குதல் விமானங்களும் எந்த நேரமும் தாக்குதலை ஆரம்பிக்க ஆயத்தமாகத் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

வெள்ளை மாளிகை இப்போதைக்கு ஈராக்குடன் போருக்குப் போகப்போவதில்லை என்று கூறிக்கொண்டாலும், அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்ரகன் போருக்கான ஏற்பாடுகளில் தீவிரமாக இருப்பதாக பென்ரகன் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க கடற்படையின் மருத்துவமனைக் கப்பலும் (Hospital Ship) வளைகுடாப்பகுதி நோக்கி நகர்த்தப்பட்டு வருகின்றது. இன்னும் சில தினங்களில் அது வளைகுடாப் பகுதியைச் சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வளைகுடாக் கடற்பகுதியில் தரித்து நிற்கும் விமானந்தாங்கிக் கப்பல்களுடன் இன்னும 6 விமானந்தாங்கிக் கப்பல்கள் மேலும சில நாள்களில் இணைந்துகொள்ளும் என்றும் பென்ரகன் வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்காவின் இந்த இராணுவ நகர்த்தல்களை ஈராக் கடுமையாகக் கண்டனம் செய்துள்ளது. ஈராக் மீது தேவையற்ற அழுத்தத்தைத் திணிக்க அமெரிக்கா முயல்வதாக அது தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் -

கடந்த புதன்கிழமை ஈராக்கின் நகரும் ராடர் தொகுதி ஒன்றின் மீது அமெரிக்க, பிரிட்டிஷ் போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன. பக்தாத்துக்கு தென்கிழக்கே விமானங்கள் பறப்பதற்குத் தடைவிதிக்கப்பட்ட பகுதிக்குள இந்த நகரும் ராடர் தொகுதி பிரவேசித்ததால், அது தாக்கப்பட்டதாக அமெரிக்க இராணுவ மத்திய தலைமை அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை -

ஐ.நா.ஆயுதப் பரிசோதகர்கள் இடைவிடாமல் தொடர்ந்தும் தமது பணியில் ஈடுபட்டுவருகின்றனர். புது வருடப்பிறப்பன்றும் அவர்கள் தமது பணியினை மேற்கொண்டிருந்தனர். (ம)



பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்கப் படையினர்

# பாகிஸ்தான் எல்லையில் அமெரிக்கா குண்டு வீச்சு

காபூல்,ஜன.3

ஆப்கானுடனான பாகிஸ்தான் எல்லையில் அமெரிக்கப் படைகள் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தியுள்ளன. பாகிஸ்தான் எல்லைக் காவல் படைச் சிப்பாய், அமெரிக்கப் படையினரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதை அடுத்தே குண்டு வீச்சு நடத்துப்பட்டதாக அமெரிக்க இராணுவம் அறிவித்துள்ளது.

"பாகிஸ்தான் எல்லைக் காவல் படையினர் 'ஜி-3'துப்பாக்கி மூலம் சூடு நடத்தினர். இதில் அமெரிக்க சிப்பாய் ஒருவர் காயமடைந்தார். பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு விட்டு அமெரிக்கப் படையினர் திரும்பிக்கொண்டிருந்தபோது இது நடந்தது" என்று அமெரிக்க இராணுவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டையடுத்து அமெரிக்காவின் 'பி-52' ரக குண்டு வீச்சு விமானம் எல்லையோர நகரான ஷகின் பகுதியில் ஒரு குண்டை வீசிய தாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அல்கெய்டா மற்றும் தலிபான்களைத் தேடி அமெரிக்கப் படையினர் இப்பகுதியில் நடவடிக்கையில் ஈடுபடுவது வழமை. அப்படியிருந்தும் பாகிஸ்தான் சிப்பாய் ஏன் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் என்பது தெரியவரவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# இராணுவத்தை பலப்படுத்த வடகொரியா அழைப்பு

சியோல்,ஜன.3

தனது இராணுவத்தைப் பலப்படுத்துவது என்று வடகொரியா முடிவு செய்துள்ளது. "இராணுவ வலிமையுள்ள நாடாகுவோம் என்பதையே நமது புத்தாண்டு சபதமாக ஏற்போம்" என்று வடகொரிய அரசு புத்தாண்டை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வடகொரியா தனது அணுத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கப் போவதாக மிரட்டிவருவதை பல நாடுகளும் கண்டித்து வரும் வேளையில் - பசியால் வாடும் நாட்டு மக்களுக்கு - விடுத்த புத்தாண்டுச் செய்தியில்கூட இராணுவ வலிமையைக் காட்டுவோம் என வடகொரிய அரசு விடுத்துள்ள அறைகூவல், மேற்கு நாடுகள் பலவற்றையும் வியப்படைய வைத்துள்ளது.

வடகொரியாவின் அதிபராக கிம் இல் சுங் பதவியேற்றது முதல் புத்தாண்டுத் தினத்தன்று அரசின் லட்சியம் என்ன என்ற செய்தியை நாட்டு மக்களுக்கு கடிதம் மூலம் வெளிப்படுத்தி வந்தார். 1994இல் அவர் மரணமான பின்னர் ஆட்சிக்கு வந்த கொமியூனிஸ்ட் தலைவர்களும் அதே நடைமுறையைப் பின்பற்றி வருகின்றனர். அதாவது, அரசின் கடிதம் கொமியூனிஸ்ட் கட்சி, இராணுவம், இளைஞர் படை ஆகியவற்றின் சார்பில் வெளியிடப்படும் மூன்று தேசியப் பத்திரிகைகளிலும் ஆசிரியர் தலையங்க வடிவில் வெளியிடப்படும்.

இந்த ஆண்டு அவ்வாறு விடுக்கப்பட்ட செய்தியில் இராணுவ வலிமையைக் கூட்டவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

வடகொரியாவை ஊடுருவித் தாக்கவேண்டும் என்ற நோக்கத்தில் தான் 37ஆயிரம் துருப்புக்களை தென்கொரியாவில் அமெரிக்கா குவித்து வைத்திருப்பதாகவும் அந்த ஆசிரியர் தலையங்கத்தில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கின்றது. தென்கொரியாவில் உள்ள அமெரிக்கப் படையினரை அந்த நாடு விலக்கிக்கொள்ள வேண்டும் என்றும் அதில் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ம)

# மனிதனை சீனா விரைவில் விண்வெளிக்கு அனுப்பும்

இந்த ஆண்டின் இறுதி அளவில் சீனா, விண்வெளிக்கு மனிதனை அனுப்பவுள்ளது. அந்த நாட்டின் மூத்த அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

சீனாவின் இந்த எதிர்பார்ப்பு நிறைவேறினால், விண்வெளிக்கு மனிதனை அனுப்பிய முதலாவது மூன்றாம் உலக நாடு என்ற பெருமையை அந்த நாடு பெறும்.

இது தொடர்பான திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இனி அதனது பரிசோதனைகள் மட்டுமே எஞ்சியுள்ளன என்று சங்காய் விண்வெளி நிலையப் பணிப்பாளர் யுவன் ஜீ தெரிவித்தார்.

மனிதர்களைக் காவிச்செல்லக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட விண்கலங்களை சீனா ஏற்கனவே வடிவமைத்து, விண்ணில் செலுத்தியுள்ளது. அத்தகைய 'செஞ்சுவா-IV' என்ற விண்கலத்தை சீனா கடந்த திங்களன்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியிருந்தது. அதன் வெற்றிகளை அடுத்தே இந்த ஆண்டு இறுதியில் மனிதர்களை விண்ணுக்கு அனுப்ப சீனா திட்டமிட்டுள்ளது.

'செஞ்சுவா-IV' வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டதும் கருத்துத் தெரிவித்த சீன அதிபர் ஜியாங் ஷெமின், அது ஒரு "மிகப் பெரும் வெற்றி" என்று கருத்துத் தெரிவித்தார். (ம)

# இஸ்ரேலியர் தாக்குதலில் 5 பலஸ்தீனர் உயிரிழப்பு!

தாக்குதல் ஹெலிகளின் துணையுடன் பலஸ்தீனக் கட்டுப்பாட்டிலுள்ள காஸா பகுதியில் இஸ்ரேலியப்படைகள் நடத்திய தாக்குதலில் 4 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

காஸாவின் ஜெய்சி குடியிருப்புப் பகுதியில் உள்ள இரு அகதிமுகாம்களில் பலஸ்தீன ஆயுததாரிகளுக்கும் இஸ்ரேலியப்படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற சண்டையிலேயே இவர்கள் கொல்லப்பட்டனர். உயிரிழந்தவர்கள் அனைவரும் இஸ்லாமிய ஆயுததாரிகள் என்று இஸ்ரேலிய இராணுவத்தினர் தெரிவித்தனர். மேற்குக் கரையிலிருந்து சுமார் 3 கிலோமீற்றர் தொலைவிலுள்ள கிராமமான மவோரில் நடந்த மற்றொரு சம்பவத்தில் இஸ்ரேலியப் படைகள் பலஸ்தீனர் ஒருவரை சுட்டுக் கொன்றன. அவரும் தீவிரவாத அமைப்பைச சேர்ந்தவர் என்று இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஜெய்சிக் குடியிருப்பு அகதிமுகாமகள் கடந்த இரண்டு வருடங்களாக தீவிரவாதிகளின் உறுதியான கோட்டையாக இருந்து வருவதாக இஸ்ரேல் கூறுகின்றது. ஆனால், பலஸ்தீன அதிகாரிகள் இதனை மறுக்கின்றனர்.

இந்த அகதிமுகாம்களில் நடந்த சண்டையில் மேலும் பலர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இஸ்ரேலிய இராணுவக் கவசவாகனங்கள் நடவடிக்கையை முடித்துக்கொண்டு அகதிமுகாம்களில் இருந்து வெளியேறியதும் அங்கிருந்து அம்புலன்ஸ்கள் பல மருத்துவமனைக்கு ஓடித் திரிந்ததைக் கண்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (ம)



காயமடைந்த பலஸ்தீனர் ஒருவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப் படுகிறார்.

உலக அரங்கில்

# தென்பசுபிக் தீவுகள் சூறாவளியால் பாதிப்பு



கடல்நீரால் அடித்துச் செல்லப்பட்ட தீவு ஒன்றை விமானத்திலிருந்து படம் எடுத்தபோது இருந்த தோற்றம்.

லண்டன்,ஜன.3

தென்பசுபிக்கில் ஐந்து நாள்களுக்கு முன்னர் வீசிய தொடர்ச்சியான கடும் புயல் காற்றினால் அங்குள்ள முக்கியமான தீவுகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக, அறிவிக்கப்படுகின்றது. அவற்றில் குறைந்தது இரு தீவுகளாவது புயற் காற்றினால் கொந்தளித்த கடல் நீரால் கழுவித் துடைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதான நிலப்பகுதியில் இருந்து கணிசமான தூரத்தில் இருக்கும் இந்தத் தீவுகளில் ஒன்றான சொலமன் தீவுடனான அனைத்துத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால், அங்கு ஏற்பட்ட பாதிப்புக்கள், சேதங்கள் என்பன குறித்த விவரங்கள் தெரியவரவில்லை.

இந்தத் தீவுகளில் 700 பேர் வரையில் வசித்து வருவதாகவும் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் தெரியவரவில்லை என்றும் உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த ஞாயிறன்று சூறாவளி வீச ஆரம்பித்ததாகவும் இதனால், வானொலித் தொடர்புகளும் விமானத் தொடர்புகளும் முற்றாக இழக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவித்தனர்.

சூறாவளியினால் அடித்துச் செல்லப்பட்ட தீவுக்கு அருகாகச் சென்ற ஓர் ஆஸ்திரேலியக் கப்பலில் இருந்தவர்கள், தீவு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதைத் தாம் அவதானித்ததாகத் தெரிவித்துள்ளனர். ஆனாலும், தீவில் சில மக்கள் தமது அன்றாடப் பணிகளில் ஈடுபட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்ததாகவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

ரவெங்கா தீவின் கிராமங்களும், திகோபியா தீவின் நமோ பகுதியும் மிக கடல் நீரினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக விமானத்தில் இருந்து எடுத்த படம் ஒன்றின் மூலம தெரியவந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (ம)

# துயர்பகிர்கின்றோம்

எமது ஆலய பிரதமகுருவும்
ஹாட்லிக் கல்லூரி ஆசிரியருமாகிய
**சிவஸ்ரீ சோமாஸ்கந்தகுருக்கள்**
அவர்களின் கனிஷ்ட புத்திரன்

## சிற்பவன்

அவர்களின் அகால மரணத்தையிட்டுத் துயருறும் குடும்பத்தினருக்கு எமது பரிபாலனசபை சார்பான அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவர்களது துயரத்தில் பங்கு கொள்ளுகின்றோம்.

அல்வாய் சாமணந்தறை
ஆலடிப் பிள்ளையார் கோவில்
பரிபாலனசபையினர்.

*அல்வாய்.* (சி-25800)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 25 - 07 - 1927



உதிர்வு 04 - 12 - 2002

## திருமதி சீவரத்தினம் சரஸ்வதி

*எம் இதயத்தின் ஒளிவிளக்கு*
*எம் இல்லத்தின் அன்புக்கோலம்*
*எம்மை அரவணைத்த தாயே*
*பூவோடும் பொட்டோடும்*
*இறையடி சேர்ந்தீரே!*

இன்று (03. 01. 2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்புத் தாயாரின் ஆத்மசாந்திப் பூசையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மணியர்பதி லேன்,*
*கொக்குவில் மேற்கு.*
*021- 222 2935.*

- குடும்பத்தினர்.

(12646)

## திருவாசக முற்றோதல்

வலிகாமம்தெற்கு,ஜன.3

இணுவில் காயத்ரிபீடம் ஸ்ரீகண்ணகா பரமேஸ்வரி ஆலயத்தில நாளை சனிக்கிழமை பகல் விசேட அபிஷேகம், பூசைகளை தொடர்ந்து திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம பெறவுள்ளது. சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெறும். (எ-152)

## பளைப்பகுதி கிராமங்கள் புனரமைக்கப்படும்

பளைப் பிரதேசத்தில் அழிவுக்கு உள்ளான சில கிராமங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களால் புனரமைக கப்படவுள்ளன.

மாசார், சோரன்பற்று, அரசர்கேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் சர்வோதய நிறுவனமும், முகாவில், கோவில்வயல் ஆகிய பிரிவுகளில் போரூட் நிறுவனமும், தம்பகாமம் பிரிவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவுள்ளன. (எ-117)

## பெருங்குளத்தில் மிதிவெடி அபாய அறிவித்தல் பதாகை

சாவகச்சேரி,ஜன.3

சாவகச்சேரி பெருங்குளம் - சங்கத்தானை வீதி, பெருங்குளம் - கற்குழி ஆகியவற்றின் ஓரங்களில் மிதிவெடி அபாய அறிவித்தல் பதாகைகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

'ஹலோ ட்ரஸ்ட்' நிறுவனம் இதனைத் தொங்கவிட்டுள்ளது. (எ-31)

## சாவகச்சேரிஆஸ்பத்திரியில் நோயாளர் அதிகரிப்பு

தென்மராட்சி,ஜன.3

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைபெறுவோர் எண்ணிக்கை கடந்த மாதம் திடீரென அதிகரித்துள்ளது. கடந்த மாதத்தில் 9 ஆயிரத்து 943 பேர் இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் 70 சதவீத மானோர் வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். இத்தகவலை வைத்தியசாலைப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிரசவ வார்ட்டும் இயங்கத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# CIIT கணனிக் கல்லூரி

சந்நிதி வீதி, அச்சுவேலி.

**DIP. IN MS. OFFICE, PAGE MAKER, COREL DROW**

ஆரம்பம்: 04-01-2003 சனி 4.p.m.

☆ வாரத்தில் 5நாள்கள் செய்முறை வகுப்பு
☆ சான்றிதழ் வழங்கப்படும்
☆ குறைந்த கட்டணத்தில் நிறைவான கல்வி

இயக்குநர்,
B.மனோகரன்

(12645)

# புதிய வகுப்புகள்
## ஆரம்பம்: 20.01.2003

01. ஆங்கில வகுப்புகள்
02. தட்டெழுத்து, சுருக்கெழுத்து(தமிழ்)
03. தட்டெழுத்து(ஆங்கிலம்)
04. உடையமைத்தல் பயிற்சி
05. முன்பள்ளி வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.(02.01.2003)

**விண்ணப்ப முடிவு திகதி: 15.01.2003**

நிர்வாகம்,
"மக்கள் நலன் காக்கும் பிரிவு",
இருபாலைச் சந்தி, கோப்பாய்.

(12647)

# 21ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
## சின்னவி அருள்

14.12.2002இல் இந்தியாவில் அமரத்துவமடைந்த சி.அருள் அவர்களின் மரணச் செய்திகேட்டு பலவழிகளிலும் உதவிகள் செய்தவர்களுக்கும், அனுதாப அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டவர்களுக்கும் இன்று (03.01.2003) வெள்ளிக் கிழமை நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ள விருக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*குசையப்பர் கோயிலடி,*
*அளவெட்டி தெற்கு.* (12653)

- குடும்பத்தினர்.




உதயன்

## விளாங்குளம் விவகாரம்

இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு அடிப்படையாக அமைந்த காரணிகள் பல. அவற்றில் தங்களது தாயகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற இன உணர்விலான - உரிமை அடிப்படையிலான - உந்துதலும் முக்கியமானது.

வடக்கும், கிழக்கும் தமிழர் தாயகம். பாரம்பரியமாக அவர்கள் வசித்துவரும் பிரதேசம். பூகோள ரீதியாகத் தொடர்ச்சியான நிலப்பரப்புகளைக் கொண்ட வாழிடம்.

- இவ்வாறு வரலாற்று ரீதியாக - பாரம்பரிய - தாயகத்தை தமிழர்கள் கொண்டிருப்பதுதான் அவர்களது உரிமைப் போருக்கான அடிப்படைகளில் முக்கியமானது என்பதை உணர்ந்த சிங்களப் பேரினவாதம், அதனைத் திட்டமிட்டுத் துண்டாடி அழிக்கும் முயற்சியில் பல தசாப்தகாலமாக முனைப்புடன் செயற்பட்டுவந்தது.

அதற்காக சிங்களப் பேரினவாதத் தலைமை, தனது கையில் எடுத்துக்கொண்ட ஆயுதம்தான் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள்.

அரச இயந்திரம் நேரடியாக மானியங்கள், உதவிகள் வழங்கி முழு முனைப்புடனும், மூச்சுடனும், வேகத்துடனும் தமிழர் தாயகப் பூமியில் மேற்கொண்ட சிங்களக் குடியேற்றங்களை அப்போதிருந்த தமிழரின் அரசியல் தலைமைத்துவங்களாலோ அல்லது அவர்களது சாத்வீகப் போராட்டங்களாலோ தடுத்து நிறுத்த முடியவில்லை. இதை அனுபவத்தில் உணர்ந்த பின்னரே தாயகம் காப்பதற்காக ஆயுதம் தாங்கத் தலைப்பட்டனர் தமிழர். இது வரலாறு.

இந்த வரலாற்றின் மற்றொரு முக்கிய திருப்பு முனையில் இப்போது நிற்கின்றோம்.

சிங்களப் பேரினவாத அடக்குமுறையும், அரச பயங்கரவாதமும், அவற்றுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த தமிழர் உரிமைப் போரும் நாட்டை யுத்த களமாக்கி பேரழிவுக்கு இட்டுச் சென்றுள்ள இன்றைய சூழ்நிலையில், சிங்களத் தலைமையும் தமிழர்களின் வழிகாட்டிகளும் போரை நிறுத்தி, நின்று, நிதானித்துக் கடந்ததைத் திரும்பிப் பார்க்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இத்துணை அழிவுகளுக்கும், உயிரிழப்புகளுககும் காரணம் என்னவென்பதைச் சிந்தித்துப் பார்க்கும் கட்டம் இரு தரப்புக்கும் இப்போது வந்துள்ளது.

தமிழர்களை அவர்களது தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழ அனுமதிக்காததே இத்துணைப் பிரச்சினைகளுக்கும் மூலகாரணம் என்பதை இரு தரப்பும் - ஏன் சகல தரப்பினருமே - ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டுள்ளது.

- இவ்வாறு யுத்தத்திற்கு சமரசத் தீர்வு காணும் வாய்ப்பு கிடைத்துள்ள இந்த சமயத்தில், யுத்தத்திற்குக் காரணமான - திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற முயற்சியின் - அடிப்படைச் செயற்பாடு, மறுபுறத்தில் தொடர்வதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

திருகோணமலை மாவட்டம் கண்டி வீதியில் உள்ளது விளாங்குளம். 1980வரை முற்றுமுழுதாக இதுவொரு தமிழ்க்கிராமம். தமிழர் தாயகப் பூமியில் வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் எல்லைப் பிரதேசத்தையொட்டி அமைந்த தமிழர் வாழிடம்.

1983, 1987களில் நடந்த வன்செயல் காரணமாகவும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவும் அங்கிருந்த தமிழர்கள் வெளியேற்றப்பட்டனர்; விரட்டப்பட்டனர். இராணுவம் அங்கு நிலைகொண்டது.

இராணுவத்தின் உதவியோடு முதலில் சிறிய அளவில் சிங்களக் குடியேற்றம் அங்கு நிலைநிறுத்தப்பட்டது. இப்போது வணக்கத்துக்குரிய தேரர் ஒருவரின் முன்முயற்சியுடனும், இராணுவத்தின் உதவியுடனும் அப்பிரதேசத் தமிழர் ஒருவரின் காணியில் பௌத்த விகாரை ஒன்றும் அங்கு கட்டப்படுகிறது. அங்கிருந்து வெளியேறிய தமிழர்கள், இப்போது அமைதிச் சூழல் நிலவுவதால் தமது மரபுவழித் தாயகத்துக்குத் திரும்பத் தயாராகிவிட்டார்கள்.

ஆனால், அதற்கு முதல் அவர்களது காணியில் பௌத்த விகாரையை அவசர அவசரமாகக் கட்டி முடிக்கவும் சிங்களக் குடியேற்றங்களை முனைப்புடன் மேற்கொண்டு, தமிழர் தாயகத்தைப் பறிக்கவும் முழு வீச்சில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதாகத் தகவல்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலமுறை அரசின் கவனத்திற்கு இவ்விடயத்தைக் கொண்டு வந்துவிட்டனர். ஆனால், உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதாக இல்லை.

இனப்போருக்குக் காரணமாக அமைந்த விடயங்களை அரசுத் தலைமை எண்ணிப்பார்க்குமானால் - தற்போதைய சமாதான முயற்சிகள் சுமுகமாகத் தொடரவேண்டும் என்று விரும்புமானால் - இது விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்கும் என நம்பலாம்.

---

### நிர்வாகப் பணிகளுக்கான

# ஆவணங்கள் எடுத்துவரப்படவில்லை, பாடசாலை செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

அச்சுவேலி.ஜன.3

பாடசாலைகளின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கான ஆவணங்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால், குடாநாட்டுப் பாடசாலைகளில் நிர்வாக ஆவணங்களை உரியமுறையில் பேணமுடியாமல் இருப்பதாக அதிபர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது.

ஆசிரியர்கள் ஒப்பமிடும் புத்தகம், மாணவர் தினவரவு இடாப்பு, வசதிகள் சேவைக்கட்டணப் பற்றுச்சீட்டு, மாணவர் விடுகை தராதரப் பத்திரம், மாணவர் சேர்வு இடாப்பு, பொருள்கள் பதிவேடு, கணக்குப் பதிவுப் புத்தகம், புகையிரத ஆணைச் சீட்டு உள்ளிட்ட பல்வேறு ஆவணங்களுக்கு குடாநாட்டு பாடசாலைகள் பலவற்றில் தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறப்படுகிறது.

குறிப்பிட்ட பதிவுகள் கல்வி நிர்வாக சுற்றறிக்கையின் படி குறிப்பிட்ட இலக்கம் கொண்ட படிவங்கள், புத்தகங்களில் ஆவணப்படுத்தப்பட வேண்டியது மிக அவசியம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட உரிய படிவங்களில் பதிவுசெய்யாமல் அதற்குப் பதிலாக வேறு பதிவேடுகளைப் பயன்படுத்துவது யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கடந்த காலங்களில் சாதாரண நடைமுறையாக இருந்து வந்தது. இதன் மூலம் நிதி அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளில் ஊழல்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்புகள் உண்டு எனவும் கூறப்பட்டு வந்தது.

கடந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் உள்ள சில பாடசாலைகளுக்கு மாணவர் தினவரவு இடாப்புகள் மூன்றாம் தவணை பிற்பகுதியில் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ். - கண்டி வீதி திறக்கப்பட்டு ஒரு வருடம் நிறைவடையவுள்ள நிலையிலும் பாடசாலை நிர்வாகம் தொடர்பான ஆவணங்கள் யாழ்.குடாநாட்டுக்கு எடுத்துவரப்படாமை பாடசாலைகளின் நிர்வாகச் செயற்பாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-11)

---

### படை முகாமை அகற்றக்கோரி

## கரம்பைக்குறிச்சி மக்கள் மறியற்போருக்கு முஸ்தீபு!

தென்மராட்சி.ஜன.3

வரணி கரம்பைக்குறிச்சிப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினரை வெளியேற்றக்கோரி அங்கிருந்து இடம்பெயர்ந்த 25குடும்பங்கள் விரைவில் பிரதேச செயலகம் முன்பாக மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகக் கூறப்படுகிறது.

நாட்டில் சுமுகமான ஒரு சூழ்நிலை வந்ததும் தாம் தங்கியுள்ள வீடுகளிலிருந்து வெளியேறி விடுவதாக படைத்தரப்பில் முன்னர் தெரிவிக்கப்பட்டதாகவும் -

ஆனால், யுத்தநிறுத்தத்தின் பின்னரும் படையினர் அப்பகுதியிலிருந்து வெளியேறாமல் முகாமை விஸ்தரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாகவும் - இடம்பெயர்ந்த மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே தாம் பிரதேச செயலகம் முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இடம்பெயர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக இப்பகுதியில் உள்ள முகாமை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஆகியோரிடம் இப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் முறையிட்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அப்பகுதியிலிருந்து படை முகாமை அகற்றுவது தொடர்பாக தம்மால் எதுவும் செய்யமுடியாது என மக்களிடம் தெரிவித்துவிட்டதாகக் கூறப்படுகிறது. 1996ஆம் ஆண்டு தொடக்கம் இப்பகுதியில் 52ஆவது படையணி அலுவலகம் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (ஓ-117)

---

## சுகாதாரச் சீர்கேட்டைத் தடுக்க குருநகரில் துணை அலுவலகம்

### நகர பொதுவசதிகள் அமைச்சு அமைக்கும்

யாழ்ப்பாணம்,ஜன.3

குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை, நாவாந்துறை ஆகிய பகுதிகளில் சுகாதார நிலைமைகள் மிகமோசமாகச் சீர்கெட்டுள்ளன. இதனைச் சீர்படுத்த வசதியாக நகர பொதுவசதிகள் அமைச்சின் துணை அலுவலகம் ஒன்று குருநகரில் திறக்கப்படவுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த விஞ்ஞான, தொழில்நுட்ப, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் மிலிந்த மொறகொட மேற்படி பகுதிகளுக்குச் சென்று மக்களின் வாழ்க்கை நிலையை நேரில் கண்டறிந்தார்.

அந்தப் பிரதேசத்தில் மோசமான நிலையிலுள்ள சுகாதார நிலைமையைச் சீராக்க நகர பொதுவசதிகள் அமைச்சின் துணை அலுவலகம் ஒன்றை அங்கு அமைக்கவேண்டும் என்றும் -

அந்தப் பிரதேச மக்களின் சுகாதார, வீடமைப்பு, குடிதண்ணீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் - அமைச்சர் மிலிந்தவிடம் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கேட்டிருந்தார்.

இதையடுத்து நகர, பொதுவசதிகள் அமைச்சின் துணை அலுவலகத்தைத் திறக்க மிலிந்த ஏற்பாடு செய்துள்ளார் என்று அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்தத் துணை அலுவலகம் திறக்கப்பட்ட பின்னர் அந்தப் பிரதேசத்தில் பல்வேறு புனரமைப்புத் திட்டங்களையும் அது மேற்கொள்ளும் எனவும் அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார். (ஓ-3)

---

### நாளை

மார்கழி 20
சனிக்கிழமை
(04.01.2003)
திதி : துதியை
பின்னிரவு 1.19 வரை.
நட்சத்திரம்: உத்தராடம்
மாலை: 5.54 வரை.
சுபநேரம் : 3.31 - 5.01
ராகுகாலம் : 9.31 - 11.01
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

நல்லவர்கள் சான்றோர்க்கு விரோதியானாலும், நோயாளிக்கு மருந்து போல் விரும்பத்தக்கவர்கள்.

---

## ஓய்வுபெற்ற மருத்துவ அலுவலர் மீண்டும் சேவையில் ஈடுபடுவர்

### ஓய்வூதியத்துடன் சம்பளமும் கிடைக்கும்

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்திய சாலைகளில் நீண்டகாலமாக நிலவிவரும் டாக்டர்கள், வைத்திய நிபுணர்கள் மற்றும் அலுவலர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பதவியிலிருந்து ஓய்வுபெற்றவர்களை மீண்டும் நியமனம் செய்வதற்கு யாழ்.சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான அனுமதியை சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகமும், வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரும் வழங்கியதை அடுத்து ஓய்வுபெற்றவர்களை மீள் நியமனம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ள வைத்திய நிபுணர்கள், டாக்டர்கள், பல் வைத்திய அதிகாரிகள், பதிவுசெய்யப்பட்ட வைத்திய அதிகாரிகள், உதவி வைத்திய அதிகாரிகள், மருந்தாளர்கள், மருந்துக் கலவையாளர்கள், ஆய்வுகூட தொழிலநுட்பவியலாளர்கள், குடும்ப சுகாதார சேவை அலுவலர்கள், 'எக்ஸ் - றே' பதிவு செய்பவர்கள் ஆகிய தரங்களைச் சேர்ந்தவர்கள் மீள் பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும் என்று யாழ்.சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. விண்ணப்பங்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

மீள் நியமனம் பெறும் டாக்டர்கள், வைத்திய நிபுணர்கள் மற்றும் துணை மருத்துவ சேவையைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுடன், கடைசியாகப் பெற்ற சம்பளமும் வழங்கப்படும் என்றும் அறியப்படுகின்றது. (எ-135)

---

### பாடசாலை நேரம் தவிர்த்து

## யூனியன் மைதானம் செல்ல மாணவருக்குத் தடைவிதிப்பு

கோண்டாவில்,ஜன.3

உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இயங்கிவரும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள், பாடசாலை நேரம் தவிர்ந்த வேளைகளில் விளையாட்டுச் செயற்பாடுகளுக்காக மைதானத்துக்குச் செல்வதற்கு சீருடையினர் தடையாக இருப்பதாக மாணவர்கள் அறிவிக்கின்றனர்.

கடந்த பாடசாலை விடுமுறை நாள்களில் பாடசாலை மைதானத்தில் உதைபந்தாட்டம் மற்றும் கிரிக்கெட் ஆகியவற்றுக்கான மைதானத் தயாரிப்பு வேலைகளைச் செய்வதற்கு சென்றபோது சீருடையினர் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தியதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டில் இப்பாடசாலை சொந்த இடத்தில் இயங்க அனுமதிக்கப்பட்டது. ஆயினும், பாடசாலை முடிவடைந்த பின்னர் மாணவர்கள் பாடசாலை மைதானத்தைப் பயன்படுத்த ஈடுபட அனுமதிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு உடன்படிக்கை, பேச்சு என சமாதானத்துக்கான சூழ்நிலை உருவாகியுள்ள இந்த வேளையில், பாடசாலை மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவது எமது வளர்ச்சிக்கு செய்யும் பெரும் தடையாகும் எனவும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய நிலைமை தொடருமாக இருந்தால் சாத்வீக வழியிலான போராட்டத்தில் ஈடுபடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும் எனவும் மாணவர்கள் தரப்பில் கூறப்படுகிறது. (ஓ-86)

---

## உதவிப்பொருள் பற்றாக்குறை கிராம சேவையாளருக்கு சிரமம்!

சர்வதேச உதவி நிறுவனங்கள், பொது அமைப்புகள் போன்றவை கிராம சேவையாளர்கள் ஊடாக வழங்கும் உதவிப் பொருள்களில் பற்றாக்குறை ஏற்படுவதாகவும் -

இதனால் சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர்களுடன் பொது மக்கள் சச்சரவில் ஈடுபடும் துர்ப்பாக்கிய நிலை உருவாவதாகவும் - கூறப்படுகிறது.

குறிப்பாக மக்கள் அதிக எண்ணிக்கையில் மீளக்குடியமர்ந்துவரும் தென்மராட்சிப் பகுதியிலேயே இத்தகைய நிலை அடிக்கடி ஏற்படுகிறது. இப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்தவர்களில் 'அ' பங்கீட்டு அட்டை உடைய குடும்பங்களுக்கு தொண்டு நிறுவனங்கள் உதவிப்பொருள்களை வழங்கிவருகின்றன.

இதற்கான பயனாளிக் குடும்பங்கள் கிராம சேவையாளர் மூலமே தெரிவுசெய்யப்படுகின்றன.

இவ்வாறு உதவிப்பொருள்களை வழங்கும் உதவி நிறுவனங்களில் பெரும்பாலானவை ஒரு தடவையில் குறைந்த எண்ணிக்கையான குடும்பங்களுக்கே உதவிப்பொருள்களை வழங்க முன்வருகின்றன. அதிலும் உதவி வழங்குவதில் 'அ' மற்றும் 'உ' பங்கீட்டு அட்டைகளிடையே தொண்டு நிறுவனங்கள் பாரபட்சம் காட்டுகின்றன.

யுத்தம் காரணமாக தமது சொத்துகள், உடைமைகளை இழந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் தற்போதுதான் மீளக்குடியமர்ந்து வருகின்றன. இந்நிலையில் உதவிப்பொருள்களை வழங்குவதில் பங்கீட்டு அட்டை அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படுவதற்கும் -

ஒருசில குடும்பங்களுக்கே உதவிப்பொருள்கள் வழங்கப்படுவதற்கும் - கிராம சேவையாளர்களே காரணமென எண்ணும் பொதுமக்கள் அவர்களுடன் தகராறில் ஈடுபடுவதாகக் கூறப்படுகிறது. (ஓ-74)

பெற்றோர்களே!
இளமையிற் கல்வி சிலையில் எழுத்து! அதுவே எமது கருத்து.
உங்கள் மக்கட் செல்வங்களின் உயர்வுக்காக
தரம் 1முதல் O/Lவரை புதிய பிரிவு
நாளை ஆரம்பம்

**SUBRA(14)**

04.01.2003 காலை 6.30 (சனி)

- ★ மாதாந்தம் பயிற்சிப் பரீட்சைகள்.
- ★ மாணவர் வரவின்மை உடனுக்குடன் அறிவிப்பு.
- ★ மாதாந்தம் பெற்றோர் சந்திப்பு.
- ★ கடமை, கண்ணியம், கட்டுப்பாடு.

வலி.மேற்கில் பெற்றோரின் நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஒரு நிறுவனம்:
**SUBRA(14)**

(C/25465)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



அளவை அறுபதில் இன்று(03.01.2003) வெள்ளி இளைப்பாறும்
உடுவில் கல்விக்கோட்ட கல்விப் பணிப்பாளர்

### திருமிகு.அ.தற்பரானந்தன்

அவர்களை உடுவில் கல்விக்கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் அனைவரும் அவர்தம் அளப்பரிய சேவையினை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றார்கள்.

*மருதனார்மடம்,*
*சுன்னாகம்.* (C/25785)

அதிபர் நலன்புரிச்சங்கம்,
உடுவில் கல்விக் கோட்டம்.

## விண்ணக வாழ்வின் 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### மரியான் சூசைப்பிள்ளை

*(சமாதான நீதிவான், ஓய்வுபெற்ற ஆசிரியர்)*

மண்ணில் 14 - 04 - 1926
விண்ணில் 03 - 01 - 1983

ஆண்டுகள் இருபது மறைந்தாலும்
ஆறவில்லை எம் மனவேதனை
மனைவி வாழ்கிற போதும் எங்கு
வழிகாட்ட நீங்கள் இல்லை - உம்
ஆத்ம சாந்தி பெற்று அமைதிபெற
ஆண்டவனை வேண்டுகின்றோம்

இவரின் ஆத்மசாந்திக்காக இளவாலை புனித யூதாததேயு ஆலயத்தில் இன்று (2003.01.03) வெள்ளி காலை 6.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் கலந்துகொண்டு செபிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இளவாலை மேற்கு,*
*இளவாலை.* (11937)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

## 33ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் உதிராய் 10 - 04 - 1920



விண்ணில் ஒளியாய் 02 - 12 - 2002

### திருமதி சின்னப்பு ஞானம்மா

*(மயிலிட்டி)*

பூமியில் எம்மைப் பண்புடன் வாழ வைத்த தாயே!
பாதியில் எம்மைப் பிரிந்ததுமேனோ?
கண்ணை இமை காப்பதுபோல காத்துவந்த தாயே!
கல்வியில் எம்மை உயர வைத்த தாயே!
எங்கள் உயர்வுக்கு வழி சமைத்த தாயே!

திங்கள் ஒன்று மறைந்தாலும்
மறையாது உங்கள் நினைவு
தாங்கள் ஆத்ம சாந்திக்காய்
இறைஞ்சுகின்றோம் இறையை!

முடிவில்லாத சமாதானம் இவருக்கு உண்டாகுக
முடிவில்லாத பிரகாசம் இவரில் ஒளிர்வதாக!

என்றும் மறவாத:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி:
*காணிக்கை மாதா கோயிலடி,*
*6ஆம் வட்டாரம்,*
*மயிலிட்டி.* (12529)

தற்காலிக முகவரி:
*கல்லடி ஒழுங்கை,*
*புலோலி கிழக்கு, பருத்தித்துறை.*

## துபுதார, அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்: இறுதித் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.3

அரச பெண் அலுவலர்கள் துபுதார, அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் சேர விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் சேர்வதற்கான திகதி கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதியுடன் முடிவடைவதாக முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

1983ஆம் ஆண்டு 231ஆம் இலக்கம், 1985ஆம் ஆண்டின் 291ஆம் இலக்கம் கொண்ட சுற்றறிக்கைகளின் பிரகாரம் இதுவரை காலமும் இந்தவகை ஓய்வூதியத் திட்டத்தில் சேராதுவிட்ட பெண் அலுவலர்களுக்கு இதன்மூலம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 1983ஆம் ஆண்டின் முன்பு இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படாத பெண் அலுவலர்களும் இதில் சேர்ந்துகொள்ளலாம்.

இது தொடர்பான விவரங்கள் ஒக்ரோபர் மாதம் 10ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

(ஒ-10)

## வைபவ ரீதியாக தரம் ஒன்றுக்கு மாணவர் அனுமதி

வலிகாமம் தெற்கு,ஜன.3

அரச பாடசாலைகளில் இவ்வருடத்தில் தரம் ஒன்று மாணவர்களை அனுமதிப்பதை இம்மாதம் 9ஆம் திகதி வியாழக்கிழமை வைபவ ரீதியாகக் கொண்டாட கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டிலுள்ள சகல அரச பாடசாலைகளிலும் அன்றைய தினத்தில் ஆண்டு ஒன்று வகுப்புக்கான மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் திருகோணமலையில் ஆண்டு ஒன்றுக்கான மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் தேசிய வைபவம் 9ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

தரம் ஒன்று வகுப்புகளில் அனுமதிபெறும் மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு மாணவர்களின் உளப்பாங்குக்கு அமைவாக ஆசிரியர்களும் நியமிக்கப்படுவார்கள்.

(ஒ-152)


**நியூ சயன்ஸ் அக்கடமி**
நெல்லியடி
**A/L 2005**
*இணைந்த கணிதம்*
திரு.செந்தில்நாதன்
*ஆரம்பம்:*
05.01.2003
ஞாயிறு பி.ப. 5.30 மணி.
*இரசாயனம்:* திரு.மணியம்
*பௌதிகம்:* திரு.முகன். திரு.பிரபா
*உயிரியல்:* திரு.தற்பரன்
(12496)


## திருக்குடும்பமடம் மீண்டும் இயங்குகிறது

யாழ்ப்பாணம்,ஜன.3

மிருசுவில் திருக்குடும்ப கன்னியர் மடம் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது. கடந்த 2000ஆம் ஆண்டில் இடம்பெற்ற தென்மராட்சி இடப்பெயர்வை அடுத்து மடம் செயற்படாமலிருந்தது.

மடம் மீளத்திறக்கப்பட்டதை அடுத்து மூன்று அருட்சகோதரிகள் சேவைக்கென யாழ். திருக்குடும்ப கன்னியர் மடத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இம்மடத்துடன் முன்னர் இயங்கி வந்த பராமரிப்பற்ற பிள்ளைகளின் காப்பகமும் மீள இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-15)


**வேணுகா தொலைத்தொடர்பு நிலையம்**

5ஆம் ஆண்டு நிறைவுதினத்தையும்
புதுவருடத்தையும் முன்னிட்டு
தலைமைக் கிளை இலங்கை வங்கியினர் ஆஸ்பத்திரி வீதி,
இரண்டாம் கிளை இலங்கை வங்கியினர், ஸ்ரான்லி வீதி,
திருநெல்வேலிக் கிளை இலங்கை வங்கியினர்,
முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரி
**திரு.தெய்வேந்திரம்**
ஆகியோருக்கு புதுவருட வாழ்த்துக்களுடன் எமது மனமார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திரு.இ.சிறிதரன்
உரிமையாளர்
**வேணுகா தொலைத்தொடர்பு நிலையம்,**
இல.964, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோயிலடி.
T.P: 222 2541, 222 2845,
222 5076, 0777 738337
(C/25795)


## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 - 03 - 1928



மறைவு 03 - 01 - 2002

### அமரர் சின்னத்தம்பி காளிதாசன்

*(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்)*

திதி: 24.12.2002 பஞ்சமித்திதி

அன்பின் இருப்பிடமே! பாசத்தின் ஒளிவிளக்கே!
என்றும் எமக்காக உம் வாழ்வைத் தந்தவரே!
இன்றுடன் ஓராண்டு எமைவிட்டுச் சென்றாலும்
என்றும் உம் நினைவு எம் நெஞ்சில் நிலைத்திருக்கும்.

*687/28A, மானிப்பாய் வீதி,*
*ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.* (12500)

- குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

யூரோவில் பொதுமுகாமையாளர் மா.இராமதாசன் அவர்களின்
அன்பு மாமனார்

### சின்னத்தம்பி கனகசபை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*866, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.* (16639)

- யூரோவில் சமூகம்.


**வெளிவந்துவிட்டது!**

பாலர் ஆசிரியர், முகாமையாளர், கல்வியியலாளர், ஆரம்ப ஆசிரியர்,
பெற்றோர்களுக்கு உதவும் பாலர் கல்வி தொடர்பான அரிய நூல்:

**நவீன பாலர் கல்விச் செல்நெறிகள்**
**"New Trends In Pre-School Education"**

நூலாசிரியர்: நீண்டகாலமாக பாலர் கல்வி தொடர்பான ஆய்வுகளை நடத்திய கல்வியியல் ஆய்வாளர்:

**திரு.பாலசுப்பிரமணியம் தனபாலன்**
*(B.A.(Cey), PGDE, M.Phil in Education)*

- ★ தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளில் பாலர் கல்வி விருத்தி
- ★ பாலர் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை - பாலர் உளவியல்
- ★ முன்மொழி - எண்விருத்திகள், ஆரம்பகண் - கைவிரல் பயிற்சிகள்.
- ★ பாலர் கற்றலை அதிகரிக்கும் காரணிகள், பாலர் உடல் - உள விளையாட்டுக்கள் - கற்றல் - கற்பித்தல் சாதனங்கள்.
- ★ பாலர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி, நவீன பாலர் கல்வி முகாமைத்துவம் மற்றும் பல நவீன பாலர் கல்வி அம்சங்கள் கொண்ட நூல்:

**நவீன பாலர் கல்விச் செல்நெறிகள்**

இலங்கை முழுவதற்குமான ஏகவிநியோகத்தர்கள்:

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

243, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 021-222 2373 (12536)

எதிர்காலச் சந்ததியினருக்காக

# கலை மற்றும் கலாசாரத்தினை நாம் வளர்த்தெடுக்க வேண்டும்!

## முன்னாள் கல்விப் பணிப்பாளர் உரை

வடமராட்சி,ஜன.3

சகல இன மக்களாலும் தமிழர் கலாசாரமும் கலைகளும் பெரிதும் விரும்பப்படுகின்றன. சிறந்த பண்பாடுகளைக் கொண்ட தமிழரது கலாசாரங்களை தொடர்ச்சியாக நாம் வளர்த்தெடுத்து எதிர்காலச் சந்ததியிடம் கையளிக்கவேண்டும்.

இவ்வாறு வடக்குக் கிழக்கு மாகாண இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் கே.சிவநாதன் துன்னாலை வசந்தம் முன்பள்ளி பரிசளிப்பு மற்றும் கலை விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி மண்டபத்தில் துன்னாலை மகளிர் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத் தலைவி பண்டிதை திருமதி பத்தினிப்பிள்ளை வல்லிபுரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிவநாதன் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ் கலை, கலாசாரங்கள் தற்பொழுதும் பெரும் சிறப்புப் பெற்றவையாக விளங்குகின்றன. சகல இனமக்களும் தமிழரது கலை, கலாசாரங்களை பெரிதும் விரும்புவதே இதற்குச் சான்றாகும். இப்படிப்பட்ட தமிழ்க கலை, கலாசாரங்களைத் திறம்பட வளர்த்து அவற்றை இளைய தலைமுறையிடம் கையளிக்கவேண்டும். இளைய தலைமுறையும் இதனைக் கட்டிக்காத்துப் பேணவேண்டும். இந்நிலை நீடிக்குமானால் தமிழ் கலை, கலாசாரங்கள் என்றென்றும் பெருமையுடன் நீடுழிவாழும்.

நல்ல பல கலை நிகழ்வுகள் சகல கிராமங்களிலும் இடம்பெற வேண்டும் என்றார் அவர்.

விழா ஆரம்பத்தில் மாவீரர் மில்லரின் தாயார் திருமதி வல்லிபுரம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். பரிசில்களை திருமதி சிவநாதன் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் வடமராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.சத்தியசீலன், வடமராட்சி முன்பள்ளி ஆசிரிய ஆலோசகர் ஏ. கே.எஸ். திருச்செல்வம், கட்டைவேலி, நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பதில் பொது முகாமையாளர் வி.கார்த்திகேசு ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர். (ஒ-173)

கொடிகாமத்தில்

# பறவைகளின் சரணாலயமாக மாறிவரும் சந்தைக் கட்டடம்

யாழ்ப்பாணம்,ஜன.3

பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்ட கொடிகாமம் நவீன மரக்கறிச் சந்தைக் கட்டடம், பயன்படுத்துவோர் எவருமின்றி பறவைகள் சரணாலயமாக மாறிவருவதாகக் கூறப்படுகிறது.

சந்தையின் மத்திய பகுதியில் அமைந்துள்ள இந்த நவீன சந்தைக் கட்டடம் அண்மையில் மரக்கறி வியாபாரிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், அவற்றின் வியாபார நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

எனினும், புதிய கட்டடத்தொகுதி வடிவமைப்பு தமது வியாபார நடவடிக்கைகளுக்கு வசதியாக அமையவில்லை எனக் கூறிய வியாபாரிகள் திடீரென அங்கிருந்து வெளியேறி, மீண்டும் பழைய மரக்கறிச் சந்தைப் பகுதியைக் கைப்பற்றி அங்கு வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதனால், பல லட்சம் ரூபா செலவில் சந்தையின் மையப்பகுதியில் நவீன முறையில் அமைக்கப்பட்ட மரக்கறிச் சந்தைக்கட்டடத் தொகுதி பயன்படுத்துவோர் எவருமின்றி, பறவைகளின் சரணாலயமாக மாறிவருகின்றது. -(எ-15)

# பொலீஸார் – பொதுமக்கள் நல்லுறவு பலப்படுத்தப்பட வேண்டிய காலமிது!

## பொலீஸ் அத்தியட்சகர் பிரேமரட்ண கூறுகிறார்

செம்பியன்பற்று,ஜன.3

மக்களின் சேவகர்கள் தாம் என்பதைப் பொலீஸார் மறந்துவிடக் கூடாது. பொலீஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையிலான நல்லுறவு பலப்படுத்தப்படவேண்டும். இதுவே காலத்தின் தேவை.

- இவ்வாறு தெரிவித்தார் நெல்லியடி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் பிரேமரட்ண.

பருத்தித்துறை, தும்பளை இலட்சுமணன் தோட்டம் இடம்பெயர்ந்தோர் முகாம் மக்களுக்கு நத்தார்ப் பரிசுகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதுடன் மக்களைப் பாதுகாத்தலே பொலீஸாரின் முக்கிய கடமை. இக்குறிக்கோளை மையமாகக் கொண்டே பொலீஸார் செயற்பட்டுவருகின்றனர்.

இலங்கை மக்கள் அனைவரும் சாதி, சமய வேறுபாடின்றி புரிந்துணர்வுடன் ஒற்றுமையாக வாழவேண்டும். நாட்டில் அமைதி, சமாதானம் நிலவ வேண்டும். அத்துடன் மக்கள் மகிழ்ச்சியான வாழ்வை வாழவேண்டும்.

எவரும் யுத்தத்தை விரும்புவதில்லை. நீண்ட காலமாக இடம்பெற்றுவந்த கொடிய யுத்தம் எங்கள் எல்லோரையும் பாதித்துவிட்டது. இன்று யுத்த நிலை மாறி அமைதி நிலை ஏற்பட்டுள்ளது. தற்போதைய சமாதான சூழல் நீடிக்கவேண்டும். அப்போதுதான் நாங்கள் யாவரும் மகிழ்ச்சியுடன் வாழமுடியும். (எ-36)

# தமிழகச் சிறைகளில் 28 இலங்கையர்கள்!

## போதைப்பொருள்களுடன் கைதானவர்கள்

கொழும்பு,ஜன.3

இந்திய போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரால் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் போது 58 கோடி ரூபா பெறுமதியான 241 கிலோ போதைவஸ்துக்களுடன் கைது செய்யப்பட்ட 28 இலங்கையர்கள் தற்போது தமிழகத்தில் உள்ள சிறைகளில் சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த 28 பேரில் இலங்கையில் பெரிய அளவில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட 8 முக்கியநபர்கள் அடங்கியுள்ளனர் என இலங்கை போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவிக்கின்றனர். இந்தியாவில் மேற்கொள்ளப்படும் திடீர்ச் சோதனை நடவடிக்கைகள் காரணமாக இலங்கையில் போதைப்பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் போது சுமார் 60கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டது எனவும் -

அதன் பெறுமதி 20 கோடி ரூபா எனவும் - தெரிவிக்கப்பட்டது.

சிறிய அளவில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட சுமார் 10 ஆயிரம் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக இலங்கை போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவைச் சேர்ந்த உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து 11 கிலோ ஹெரோயின் கடத்தி வந்த வர்த்தகர் ஒருவர் இலங்கையில் கைது செய்யப்பட்டார். எனினும் அவர் தப்பியோடி இந்தியா சென்று அங்கும் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டபோது, 14 கிலோ ஹெரோயினுடன் இந்தியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### பண்ணிசை வகுப்பு

காரைநகர் கிழவன்காடு கலா மன்றத்தில் இலவச பண்ணிசை வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பண்ணிசை வகுப்பில் இணைய விரும்பும் மாணவர்கள் கிழவன்காடு கலாமன்றத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று மன்றத் தலைவர் அறிவித்துள்ளார். (எ-73)

### அனுருத்தவின் வாக்குமூலம் குறித்து விசாரணை

வங்கி உண்டியல்கள் தொடர்பாக முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த அளித்திருக்கும் வாக்குமூலம் தொடர்பாக லஞ்சப் புகார்கள் விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறது.

அனுருத்த ரத்வத்த ஆணைக்குழுவிற்கு அளித்த வாக்குமூலத்தில் குறிப்பிட்ட வங்கி உண்டியல்கள் தனக்குச் சொந்தமானவையல்ல என்றும் அவை தனது இரண்டு மகன்மாருக்கும் உரியவை என்றும் - கூறியிருக்கிறார் எனத்தெரியவருகிறது.

இதனையடுத்து அனுருத்த ரத்வத்தவின் சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான நாடாளுமன்றப் பிரகடனம், ஜனாதிபதி செயலக அறிக்கை என்பன குறித்து ஆணைக்குழு விசாரணை நடத்தி வருகிறது. - (ஐ)



குருநகர் நாட்டுக்கூத்து மன்றம் குருநகர் கலையரங்கில் மேடையேற்றிய 'புரட்சித்துறவி' நாட்டுக்கூத்து நிகழ்வின்போது சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வண.பிதா பி.எம்.இம்மானுவேல் அடிகளாருக்கு கூத்து இயக்குநர் ஆர்.ஜீ.கிறிஸ்தோபர் மலர் மாலை சூட்டி வரவேற்பதைப் படத்தில் காணலாம். *(படம்:குருநகர் செய்தியாளர்)*

# மாமனிதர் குமாரின் 3ஆவது ஆண்டு நினைவு

குருநகர்,ஜன.3

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் அமரர் குமார் பொன்னம்பலத்தின் 3ஆவது நினைவு தினம் நாளைமறு தினம் ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கட்சியின் தலைவரும் எம்.பியுமான அ.விநாயகமூர்த்தி தலைமையில் யாழ்ப்பாணத்தில் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்புப் பிரதிநிதிகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பிரமுகர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டு அஞ்சலிஉரை நிகழ்த்துவர்.

நினைவஞ்சலிக் கூட்டத்தை யாழ்ப்பாணத்தின் எந்தப் பகுதியில் நடத்துவது என்பது பற்றி நாளை சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ். நகரில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ள கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-51)

# இறையுணர்வு ஏற்பட வழிகாட்டும் திருநீறு

**க.சசிலேகா**

சைவர்களாகிய நாம் அணியும் வீபூதியானது புனிதத்தன்மை மிக்கதாகும். சைவசமய அடையாளத்தை



எடுத்துக்காட்டுவது மட்டுமன்றி இறைவனின் திருவருட் பேற்றினை நினையூட்டவும் வாழ்க்கை நிலையாமையை எடுத்துக்காட்டி இவ்வுடம்பும் ஒரு காலத்தில் நீறாகும் என்ற நினைவோடு நல்வழியில் வாழவும் உதவுகின்றது எனலாம்.

இறைவன் உண்மையே உருவமானவன். நாம் திருநீற்றைப் பூசும் பொழுது உண்மையே பேசுவோம் என்று உறுதிபூணல் வேண்டும். திருநீற்றின் வெண்மை நிறம் தூய்மையைக் குறிக்கின்றது. நாம் நீராடித் தோய்த்து உலர்ந்த ஆடையை அணிந்து திருநீறு பூசிப் புனிதமாகக் கோயிலுக்குச் செல்லுகின்றோம். அது நமக்குப் புறத்தூய்மை, அகத் தூய்மை ஆகிய இரண்டும் அவசியம் என்பதையே குறிக்கின்றது.

தினந்தோறும் விபூதி தரிப்பதால் இறையுணர்வு ஏற்படும். அது உடற்பிணி, உளப்பிணி இரண்டினையும் நீக்கும் ஆற்றலுடையது. அதுமட்டுமன்றி எங்கள் மனம், மொழி, மெய் ஆகிய மூன்றையும் தூய்மையாக்கும் கருவியாகவும் விளங்குகின்றது. விபூதியின் சிறப்புக் கருதியே உடல் தூய்மைக்காகப் பஸ்மஸ் நானம் (விபூதியை உடலெங்கும் பூசுதல்) செய்யப்படுகின்றது.

வேத, உபநிடதங்களிலேகூட விபூதி பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. 'விபூதியைக் கைநழுவ விடாதே' என்பது உபநிடத வாக்கியமாகும். பதின்மூன்று உபநிடதங்கள் திருநீற்றின் மகிமையைப் புகழ்ந்துரைக்கின்றன. தமிழ்மூதாட்டி ஒளவையார்கூட 'நீறில்லா நெற்றி பாழ்' என்று திருநீறு அணிய வேண்டியதன் அவசியத்தைக் குறிப்பிட்டுள்ளார். விபூதியின் மகத்துவம் நாயன்மார்களின் பதிகங்களில் பரவலாகவும் சம்பந்தப் பெருமானது திருநீற்றுப் பதிகத்தில் சிறப்பாகவும் கூறப்பட்டுள்ளது. சம்பந்தர், திருநீற்றுப் பதிகத்திலே அறுபத்தேழு துறைகள் அதனை வலியுறுத்தியுள்ளார். "பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறு" என்று அப்பரும், "மாசிலாத வெண்ணீறு பூசுதல் மனமொன்று டைத்தே" என்று சுந்தரரும் பூசுவது வெண்ணீறு என்று மாணிக்கவாசகரும் திருநீற்றின் பெருமையைப் புகழ்ந்துரைத்துள்ளனர்.

திருநீற்றை அணிவோரைக் கண்டவுடன் சிவனடியாராக, சிவவேடமாக நினைந்து வணங்கிய பெருமை அக்கால நாயன்மார்களைச் சாரும். இறைவன் தம்மிடத்தே குடிகொண்டிருக்கின்றான் என்பதைத் திருநீறு அவர்களுக்கு நினைவுபடுத்தியது. எமக்கும் நினைவுபடுத்துகிறது. திருநீறு

**ஞானக்கதிர்**

அணிந்தவர்களைச் சிவபெருமானாகவே மதித்து அடியார்கள் போற்றினார்கள். சம்பந்தர், அப்பர், மெய்ப்பொருள்நாயனார், ஏனாதிநாதர், சேரமான்பெருமாள் நாயனார் என்போரது வாழ்க்கை வரலாற்றினூடாக இவர்கள் திருநீற்றுக்கு அளித்த மதிப்பைக் காணலாம்.

அப்பர் சுவாமிகளுக்கு சூலை நோய் வந்தபோது விபூதியையே உடன் மருந்தாகப் பூசக் கொடுத்தார் திலகவதியார். அதனைப் பூசித் தேவாரம் பாடியதும் சூலை மறைந்துவிட்டது. இவ்வாறே, சம்பந்தர் வரலாற்றிலே பாண்டிய மன்னன் வெப்பு நோயால் துடித்த போது அவனது மேனியிலே திருநீறு இட்டுத் திருநீற்றுப்பதிகம் பாடியமையையும் உடனே பாண்டியனின் நோய் தீர்ந்ததனையும் காணுகின்றோம். ☆

யாழ்.குடாநாட்டில்

# அபிவிருத்தி வேலைகளுக்கு பத்து கிராமங்கள் தெரிவு

கொக்குவில்,ஜன.3

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் மற்றும் போருட் ஆகியன இணைந்து இந்த ஆண்டில் குடாநாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத்திட்டங்களுக்கென 10 கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

குடாநாட்டில் உள்ள 5பிரதேச செயலகங்களில் இருந்தும் தலா இரண்டு கிராமங்கள் இவ்வாறு மீள் குடியமர்வுக் கிராமங்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் பிட்டியெல்லை, பருத்தித்துறை ஆகியனவும், வேலணை பிரதேச செயலர் பிரிவில் மண்டைதீவு, செட்டிபுலம் ஆகியனவும் -

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் சுப்பர்மடம் ஆதிகோவிலடி மற்றும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் கரவெட்டி கிழக்கு, மாதோணி, மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் ஆழியவளை, உடுத்துறை ஆகியனவே இவ்வாறு வேலைத் திட்டங்களுக்கென தெரிவுசெய்யப்பட்டுள்ள கிராமங்களாகும். (எ-76)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள் 09-01-2003 வியாழக்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். 06-01-2003இற்கு முன் பதிவு செய்யவும் (முதல்நாள் தடுப்பு மருந்து இலவசம்). இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (12562)

## இறைச்சிக்கோழிகள் தேவை

இறைச்சிக்கோழிகள் தேவை. உடன் தொடர்புகொள்ளவும். நல்ல விலை தரப்படும். தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (12563)

## மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, ஜேர்மனி பிரஜாவுரிமையுடைய (66இல் திருவோண நட்சத்திரம்) மணமகனுக்கு (ஒரு மாதத்திற்குள்) மணமகள் தேவை. எஸ்.பாலசிங்கம், 17/50, பண்டாரக்குளம், நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (12643)

## துர்க்கா திருமண சேவை

வெளிநாடு, உள்நாடு, அரச உத்தியோகத்தர் ஆண், பெண் இருபாலாரும் எம்மிடம் உண்டு. தேவையானவர்கள் நேரில் அல்லது கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும். துர்க்கா திருமண சேவை, இல.178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (12656)

## விற்பனைக்கு

டீசல் எஞ்சின் (இங்கிலாந்து) 71/2 HP - 2, டீசல் எஞ்சின் செல்ராட 31/2 Kw, மண்ணெண்ணெய் எஞ்சின் 1100w என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச.சுரேஸ்குமார், கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (12583)

## தவறிவிட்டது


அம்பலவாணர் வீதி, உடுவிலைச் சேர்ந்த நடராசா உமாகாந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.621391950V) பேர்ஸுடன் நாவாந்துறைக்கும், உடுவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைக்கவும். (சன்மானம் வழங்கப்படும்). (12642)

''ராணிவில்லா'' இருபாலை கோப்பாயைச் சேர்ந்த தவானந்தினி பரமானந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.758631729V), அனைத்து தஸ்தாவேஜ்களும் ஒரு தொகைப் பணமும் கொண்ட கைப்பை 27-12-2002 அன்று யாழ்.நல்லூர் கந்தசுவாமி கோயிலடியில் காலை 7.45 மணியளவில் தவறிவிட்டன. தொடர்பு: 103/2,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு. (12644)

சந்நிதி வீதி, அச்சுவேலியைச் சேர்ந்த பரம்சத்தியதாஸ் யோகராஜா என்பவரது தேசிய அடையாள அட்டை (இல.681911790V), விசேட அடையாள அட்டை (இல.0903018050) என்பன கைப்பையுடன் யாழ்.கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும் (ரைப்ரைட்டிங் வீடு). (12650)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
01 - 01 - 1944



மறைவு
18 - 12 - 1998

## அமரர் சின்னப்பொடி நல்லதம்பி
### (திரவியம்)

திதி: அமாவாசை

ஆண்டுகள் நான்கு சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தா தோட்டம்,
ஆவரங்கால், புத்தூர்.
(12660)
- குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னமணி இராசரத்தினம்

கேணியடி, குப்பிளானைச் சேர்ந்த சின்னமணி இராசரத்தினம் அவர்கள் 01.01.2003 புதன் இரவு காலமானார்.

இவர் வைத்திலிங்கம் இராசரத்தினம் (முன்னாள் சாரதி-சுன்னாகம் ப.நோ.கூ.ச.) அவர்களின் அன்பு மனைவியும் தங்கராசா, ரூபராணி தவராசா (அமரர்), புஸ்பராணி (தேவி), இந்திராணி, கனகசிங்கம் (சீனன்), வனிதா, சாந்தலிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் துரைராசா, தயாபரன், தவேந்திரன், சுனிதா, தனுசா ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் சியாமளா, சிந்துசா, சிவப்பிரியா(யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை) கர்சன், ஜவனி, ஜவனன், ஜசிந்தா, சாதனா, தர்சிகா ஆகியோரின் அன்புமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

ஏழு கோயிலடி,
ஏழாலை.
(12658)
தகவல்
இ.துரைராசா
(மருமகன்).

## முருகப்பா பழனியப்பன்

(முன்னாள் முகவர், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)

543, ஆடியபாதம் வீதி, நல்லூர் வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட முருகப்பா பழனியப்பன் 01.01.2003 புதன்கிழமை அன்று சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான முருகப்பா சிவகாமிப்பிள்ளையின் அன்பு மகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் இளங்கோ, பாரதி, புகழேந்தி, நாகஇளந்திரையன், தயோதினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் அனித்தா, நேத்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் அந்திரேயா, யாதன், ஹரி, ஷெரி ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

543,ஆடியபாத வீதி,
நல்லூர்.
(12661)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

---

நாற்பது வருடங்களுக்கு மேற்பட்ட அறிமுகத்தோடு ஸ்தாபிதம் - 1962

*மீண்டும் யாழ்.மண்ணில்*

உங்கள் மூக்குக் கண்ணாடி வழங்குநர், பல் கட்டுநர்களான

## மொறாயஸ்

புதிய பெயருடனான சந்திப்பு புத்தாண்டில்

# ஒளிச்சுடர்

மூக்குக் கண்ணாடி அகம்

05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்ப்பாணம்.

முகங்களுக்கு ஏற்ற விதங்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும் பற்களை உறுதியாகக் கட்டிக்கொள்ளவும் மிதப்புப் பற்களுக்கு கிளிப் போடவும் நாடவேண்டிய இடம்

# ஒளிச்சுடர்

(மொறாயஸ்)
மூக்குக் கண்ணாடி அகம்,

05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்ப்பாணம். (12663)

---

4 ஆவது ஆண்டில் JTI 24 ஆவது ஆண்டில் JTI 24 ஆவது ஆண்டில்

# JTI 2003/2004 ஆண்டுக்கான கணனி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நெறிகள் ஆரம்பம்

10-01-2003 (கிழமை நாட்களில்) 11-01-2003 (சனி, ஞாயிறு நாட்களில்)

## Diploma Courses

### Diploma in Software Engineering
- Introduction to Computer
- Windows XP
- Ms DOS 8
- Word XP
- Excel XP
- Visual Basic 6
- Visual FoxPro 6
- C++
- Java
- HTML
- Internet, E-mail

Duration 12 Months Fees : Reg + Course = 13,500/=

### Diploma in Desktop Publishing
- Introduction to Computer
- Word XP
- Corel Draw 11
- Page Maker 7
- PhotoShop 7

Duration 4 Months Fees : Reg + Course = 3,250/=

### Diploma in Microsoft Office XP.
- Introduction to Computer
- Word
- Excel
- Access
- PowerPoint
- Introduction to Internet, E-mail

Duration 6 Months Fees : Reg + Course = 2,250/=

### Diploma in Visual Basic Programming
Duration 4 Months Fees : Reg + Course = 3,500/=

### Diploma in Web Designing
- Introduction to Internet
- Front Page
- HTML
- VB Script
- Java Script

Duration 7 Months Fees : Reg + Course = 6,250/=

### Diploma in Computer Programming
- Introduction to Computer
- Visual Basic 6
- pascal
- C++
- Oracle
- Visual FoxPro 6
- Internet, E-mail

Duration 8 Months Fees : Reg + Course = 3,750/=

### Diploma in Hardware Engineering
- Hardware Concepts
- Assemble a Complete PC System
- Software Installations & Configurations
- Handling Diagnostic Tools
- Networking, Fax modem Connection
- Multimedia, Internet
- Computer Virus, Troubleshooting

Duration 4 Months Fees : Reg + Course = 4,350/=

## Certificate Courses

- Word XP
- Excel XP
- Access XP
- PowerPoint XP
- Corel Draw
- Page Maker 7
- Visual FoxPro 6
- HTML
- Java
- Oracle

### RADIO, T.V AND VIDEO DECK REPAIRING
சகல இன றேடியோ, ரீ.வி, டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, UPS, Printer, Scanner என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)

### MOTOR REWINDING AND ELECTRICAL WIRING
சகல இன மோட்டார், (f)பான், ரான்ஸ்போமர்கள் றிவைன்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 7 மாதங்கள்)

### MOTOR CYCLE MECHANISAM
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும் (காலம் 6 மாதங்கள்)

### AIR CONDITIONing AND REFRIGERATION
சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும் (காலம் 7 மாதங்கள்)

### CITY AND GUILDS OF LONDON EXAM
1. POWER 2. ELECTRONICS

**2001/2002 பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் தங்களுடைய சான்றிதழைப் பெற்றுக் கொள்ளவும்.**

JAFFNA TECHNICAL INSTITUTE SRILANKA

## JAFFNA TECHNICAL INSTITUTE. JAFFNA SRI LANKA.


REGD NO.:15251 T.P: 2223335

11/10 B, Stanly Road, Jaffna (முட்டாசுக் கடைச் சந்தி)

No-07, Palaly Road, Jaffna (இலுப்பையடி சந்தியருகில்)

# திறந்த பொருளாதாரத்தின் விளைவாக உள்நாட்டு உற்பத்திகள் பின்னடைவு

## நிலைமை சீரடைய மல்கோ நிறுவன இயக்குநர் சுனித் விஜேசிங்க வலியுறுத்து



ரீ.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் 'மல்கோ' நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சுனித் விஜேசிங்கவை அறிவிப்பாளர் சமுதிக சமர விக்ரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள்.

**வர்த்தக ஸ்பெஷல்**

*ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்குநேர் நிகழ்ச்சியில் கடந்த 24ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் மல்கோ நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரான சுனித் விஜேசிங்க.*

*தனது குடும்பத்தின் மூத்த உறுப்பினர்களின் வழிகாட்டலில் வர்த்தகத் துறையில் அடியெடுத்து வைத்தவர் சுனித் விஜேசிங்க.*

*இவருடைய தாயாரின் தந்தையார் இவருடைய முதலாவது வழிகாட்டி. இவரின் தந்தையாரும் வர்த்தகத் துறையில் கொடிகட்டிப்பறந்தவர்.*

*'மெடலிக்ஸ் எஞ்ஜினியரிங்' எனப்படும் குடும்ப நிறுவனத்தில் இணைந்து பணியாற்றி, அதன் முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட சுனித் விஜேசிங்க பின்னர் 'மல்கோ லங்கா எஞ்ஜினியரிங்' நிறுவனத்தைச் சொந்தமாகவே நிறுவிக்கொண்டார்.*

*ரீ.என்.எல்.தொலைக் காட்சியில் சுனித் விஜேசிங்கவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குருப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர்.*

*செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்..*

*கேள்வி*:- நீங்கள் இலங்கையின் வர்த்தகத்துறையில் முதன்மைபெற காரணமான நபர்கள் பற்றியும், அதன வரலாறு பற்றியும் கூறுவீர்களா?

*பதில்*:- எனது தாயாரின் தகப்பனார் பற்றிக் கூறவேண்டும். அவர் 1923முதல் 1936வரை அரச இராணுவ சேவையில் இருந்தவர். அவர் மின்சார விநியோகக் கட்டுப்பாட்டாளராகக் கடமையாற்றினார். அவரின் தொழில்ரீதியான சில விடயங்களை நான் அறிந்து வைத்திருந்தேன். அதே நேரம், எனது தகப்பனாரைப் பற்றி கூறுவதென்றால், அவர் கண்டி தர்மராஜ கல்லூரியில் கல்விகற்கும் போதே வானொலியில் அவருக்குத் தொடர்பிருந்தது. பிறகு அவர் வீட்டுக்குத் தெரியாமல் மும்பாய்க்குச் சென்று உயர்கல்வி கற்று வீட்டுக்கு வரும்வரை யாருக்கும் தெரியாது. பிறகு இலத்திரனியல் பொறியியலாளராக 'வோக்கர் தின்ட் கிரீன்' நிறுவனத்தில் முதலாவது இலங்கையராகச் சேவையாற்றினார். அப்போது களைமான் வைத்தியசாலையில் முதலாவது 'எக்ஸ்ரே' இயந்திரத்தைப் பொருத்தினார்.

அதன் பின்பு, கொழும்பு சுற்றுப்புறத்தில் உள்ள மின்மாற்றிகள் தொடர்பாகப் பணியாற்றிவந்தார்.

அப்போது அவருக்கு உள்நாட்டில் குளிர்சாதனப் பெட்டி ஒன்றைத் தயாரிக்கும் எண்ணம் இருந்தது. அதற்காக நாட்டிற்கு குளிர்சாதனப் பெட்டிகளை இறக்குமதி செய்யும் நிறுவனம் ஒன்றுடனும் கலந்தாலோசித்தார். அப்போது நாட்டில் சாதகமான சூழ்நிலை இன்மையால் அம்முயற்சி பயனளிக்கவில்லை.

எனினும், களுத்துறையைச் சேர்ந்த சர்சிறில் என்பவரின் உதவியுடன் 1974இல் முதலாவது சிசில் குளிர்சாதனப் பெட்டி சந்தைக்கு வந்தது. எனினும், தொடர்ந்துவந்த சில பிரச்சினைகளால் எனது தந்தை அதிலிருந்து விலகிக்கொண்டார். அதன் பின்பு இலத்திரனியல் துறையிலேயே தொடர்ந்து பணியாற்ற அவர் விரும்பினார்.

அதனால் எனது பாட்டிக்கு சொந்தமான காணியில் 'மெடலிக்ஸ் எஞ்ஜினியரிங்' என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார். அங்கு அவர்கள் மின்சாரத்தைப் பகிர்ந்தளிக்கும் உபகரணங்களை உற்பத்தி செய்தனர். அதன் முதன்மை வாடிக்கையாளராக அப்போது மின்சாரசபை இருந்தது.

*கேள்வி*:- திறந்த பொருளாதாரத்தின் விளைவாக உங்களைப் போன்ற நிறுவனங்களின் உற்பத்திகள் பின்னடைவை எதிர்நோக்கின. இதனை நீங்கள் எவ்வாறு காண்கிறீர்கள்?

*பதில்*:- 1977இற்கு முன்பு உள்நாட்டு உற்பத்திகளுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. மேலும் தேவையானவற்றையே வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தோம். ஆனால், திறந்த பொருளாதாரம் ஆரம்பமாகிய பின்பு நிலைமை மாறிவிட்டது. உள்நாட்டு கைத்தொழிலாளர்களைப் பாதுகாக்க அரசு தவறிவிட்டது.

*கேள்வி*:- குடும்ப வியாபாரமாக இருந்த 'மெடலிக்ஸ் எஞ்ஜினியரிங்' நிறுவனம் 1995இல் கூட்டு நிறுவனமாக்கப்பட்டது. இதன் நோக்கமென்ன?

*பதில்*:- அதன் முக்கிய நோக்கம் எமது வியாபாரத்தை மேலும் விரிவுபடுத்துவது. அத்துடன் தொழிலை மேலும் அபிவிருத்தி செய்தோம். புதிய ஒரு தொழிற்சாலையை கடன் பெற்று ஆரம்பித்தோம்.

*கேள்வி*:- கூட்டு நிறுவனமாக்கப்பட்ட பின்பு தொழிற்சங்கப் பிரச்சினைகள் ஏதும் ஏற்பட்டனவா?

*பதில்*:- ஆம், கூட்டு நிறுவனமாக்கப்பட்டதன் பின்பு அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைத் தெரிந்து அது தொடர்பாகச் செயற்பட்டோம். 1996 காலப்பகுதியில் நான் 'மெடலிக்ஸ் எஞ்ஜினியரிங்' நிறுவனத்துடன் இணைந்தேன். அப்போது 40 மில்லியனாக இருந்த பணப்புரள்வை (Turn Over) படிப்படியாக 10 வருடங்களில் 150 மில்லியன்வரை உயர்த்திக் கொண்டேன். இந்தத் தொழில் துறையில் ஏற்பட்ட எதிர்ப்புகள் காரணமாக 1998இல் இதிலிருந்து விலகினேன். அதன்பின்பு 'மல்கோ லங்கா எஞ்ஜினியரிங்' என்ற எனது சொந்த நிறுவனத்தை ஆரம்பித்தேன்.

*கேள்வி*:- மல்கோ நிறுவனம் செலிங்கோ கிராமிய வேலைத்திட்டத்துடன் கைகோத்து செயற்படுவதனால் உங்களுக்கு இடையூறுகள் ஏற்படுவதில்லையா?

*பதில்*: இதன்மூலம் கிராமிய மின் விநியோகத்தில் இணைந்து கொள்வதில் எனக்குச் சந்தோஷம். மேலும், இந்திய நிறுவனம் ஒன்றுடன் இணைத்து இதனை மேம்படுத்தவுள்ளேன். இதனூடாக மேலும் பலருக்கு என்னால் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கமுடியும். இவ்வாறு கூறினார் சுனித் விஜேசிங்க.

# சமூகத்தின் நிலைக்களமாக ஆலயங்கள் திகழவேண்டும்!

### அமைச்சர் மகேஸ்வரன் உரை

கோப்பாய்,ஜன.3

ஆலயங்கள் சமூகத்தின் நிலைக்களமாகத் திகழவேண்டும். எமது முன்னோர்கள் ஆலயங்களை மையமாக வைத்தே தமது செயற்பாடுகளை விரிவுபடுத்தினர். தற்போது அந்நிலை அருகிவருவதைக் காணக்கூடியதாக உள்ளது - இவ்வாறு கூறினார் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன்.

கடந்த திங்கட்கிழமை பலானை கண்ணகை அம்பாள் ஆலயத்தில் மாதாந்த அன்னதான நிகழ்வை அமைச்சர் தொடக்கிவைத்து உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் நிதியாண்டில் கூடுதலான உதவித் தொகைகள் ஆலயங்களிற்கு வழங்கப்படும். வரலாற்றுப் பிரசித்திபெற்ற ஆலயங்கள் பற்றிய விவரங்கள் இணையத்தளத்தில் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆலயத்தை மையமாகக் கொண்டு செயற்பட வசதியாக விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான நிதியுதவியும் ஆலயங்களுக்கு வழங்கப்படும். இவ்வாறான பணிகளை முன்னெடுப்பதன்மூலம் ஆலயமும் மக்களும் இணைந்து செயற்பட வாய்ப்பு ஏற்படும் - என்று கூறினார் அமைச்சர். (ஒ-72)

### உடனடிப் பணப் பரிமாற்றத்துக்கு

# வெளிநாட்டு நிறுவனங்களுடன் தேசிய சேமிப்பு வங்கி ஒப்பந்தம்

யாழ்ப்பாணம்,ஜன.3

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளையில், வெளிநாடுகள் மற்றும் உள்நாட்டு நகரங்களுக்கு இடையேயான உடனடிப் பணப்பரிமாற்றச் சேவை வசதி விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக முகாமையாளர் எம்.சிவானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது :-

இதற்கான தேசிய சேமிப்பு வங்கி 'வோல் ஸ்றீற் எக்ஸ்சேன்ஞ்' மற்றும் 'முஸாண்டம் எக்ஸ்சேன்ஞ்' ஆகிய வெளிநாட்டு பணப்பரிமாற்ற நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை செய்து கொண்டுள்ளது.

[illegible] சேர்ந்த 'வோல் ஸ்றீற எக்ஸ்சேன்ஞ்' என்ற நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி பிரிட்டன், அமெரிக்கா, சவுதி அரேபியா, இந்தியா, ஹொங்கொங், ஐக்கிய அரபு இராச்சியம், பஹ்ரெயின், கட்டார் மற்றும் கென்யா போன்ற நாடுகளுடனான உடனடி பணப்பரிமாற்றத்தை மேற்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஓமானைச் சேர்ந்த 'முஸாண்டம் எக்ஸ்சேன்ஞ்' என்ற நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி ஓமானுக்கும் இலங்கையிலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் குறிப்பிட்ட கிளைகளுக்கும் இடையில் உடனடிப் பணப்பரிமாற்றம் மேற்கொள்ளப்படமுடியும் - என்றார் அவர். (ஒ-9)

# கால்நடை வளர்ப்புத் தொடர்பான திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்!

### ஐ.நா. அபிவிருத்தித் திட்டப் பிரிவு இணைப்பாளர் தெரிவிப்பு

அச்சுவேலி,ஜன.3

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களை உரியமுறையில் இயங்கச் செய்வதன்மூலம் குடாநாட்டில் கால்நடை வளர்ப்பு மேம்பாட்டுக்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்.

ஐ.நா.அபிவிருத்தித் திட்டப் பிரிவு இணைப்பாளர் திருமதி சிவாசுந்தரம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் நடைபெற்ற பண்ணையாளர்களுக்கான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ் மாவட்டத்தில் உள்ள பத்து கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் 12 கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், அவற்றில் ஒரு சில கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள்தான் உரியமுறையில் செயற்படுகின்றன. பெரும்பாலான சங்கங்கள் செயற்படாமல் உறங்குநிலையில் உள்ளன.

கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடு உரியமுறையில் இருந்தால், அவற்றுக்கூடாக ஐ.நா. அபிவிருத்தித் திட்டப்பிரிவு பல்வேறு உதவிகளைப் பண்ணையாளர்களுக்கு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

சமகால சமாதானச் சூழ்நிலை கால்நடை வளர்ப்புத்துறையில் மேம்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

மக்களின் போஷாக்கு நிலையைப் பேணிப் பாதுகாப்பதற்கும், விவசாய முயற்சிக்கும் கால்நடை வளர்ப்பு அவசியம். இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாகும்.

பண்ணையாளர்கள் ஆர்வத்துடன் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளில் பங்குகொள்வதோடு, சங்க உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முயற்சிக்கவேண்டும் - என்றார். (எ-11)



வர்த்தக தொழில் கூட்டு சம்மேளனத்தினது 2001ஆம் வருடத்திற்கான தொழில்முனைவரை தெரிவுசெய்து விருது வழங்கும் வைபவம் கடந்த வாரம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அவ்வைபவத்தில் இண்டஸ்ரியல் ஸ்ரெயின்லெஸ் ஸ்ரீல் பைபிரிகேஷன் பிரைவேட் லிமிடெட்டுக்கான வெள்ளி விருதினை அதன் நிர்வாக இயக்குநர் ந.சிவகுமாரன் பெற்றுக்கொண்டார். இந்நிறுவனம் யாழ்.நகரில் இயங்கிவரும் புரமோட்டர்ஸ் எஞ்ஜினியரிங் கம்பனி லிமிடெட் ஸ்தாபனத்தின் கூட்டு நிறுவனமாகும். வெள்ளவிழா கண்ட இக்கூட்டு நிறுவனங்களுக்குக் கிடைத்த மூன்றாவது விருது இது என்பது குறிப்பிடத்தக்கது.

## A/L - 2005

கலைப்பிரிவு காலை 8 மணி ஜனவரி - 5

Tam. - K.தர்மராஜா
Log. - P.கமல்
Geo. - K.கிரிதரன்
Eng. - G.மகேஸ்வரன்
Hin.C. / Hin. } K.சத்தியதாசன்
His. - K.ஜெயக்குமார்
Dra. - S.வரதன்
Eco. - P.சண்
Po.S. - S.சுபாஸ்கரன்
I.Q. - T.திருமுருகன்

ஆரம்பம்: 05.01.2003

(12683)

**நியூட்டன் உயர் கல்வி நிறுவனம்**
ஆரியகுளம் சந்தி அருகில், யாழ்நகர்.

## NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி, யாழ்நகர்.

**A/L 2005 கலைப்பிரிவு**

எமது ஆசிரியர் குழு

தமிழ்: M.அமரசிவம்
அளவையியல்: S.R.J.சுதன்
இந்துநாகரிகம்: கவிஞர்.S.முகுந்தன்
இந்துசமயம்: கந்த சத்தியநாதன்
பொருளியல்: திரு. சிறி
புவியியல்: திரு. கிரி

ஆரம்பம்:05.01.2003 (ஞாயிற்றுக்கிழமை) நேரம்:9.30am

கணக்கீடு - தவா
ஆரம்பம்: 2.மணி.

(12672)

## BEACON கல்வி நிலையம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 2005**

**கலை, வர்த்தகப் பிரிவுகள்**

**எமது ஆசிரியர் குழு**

| | | | |
|---|---|---|---|
| Log. | S.S.மனோகரன் | Acc. | பாலவாசன் |
| Tam. | நாக தமிழிந்திரன் | Com. | யசோ |
| Eco. | மோகன் | Eco. | மோகன் |
| Hin/C. | உமாசர்மா | Chri. | துவாரகா |
| Geo. | S.R.பாலா | Dra. | S.J.சுதன் |
| Stat. | தவசேகர் | Eng. | BRITTO |

கலைப்பிரிவு ஆரம்பம் : **05.01.2003 8 a.m.**
வர்த்தகப்பிரிவு ஆரம்பம் : **05.01.2003 10 a.m.** } SUNDAY

(12671)

## பணிநிலை வெற்றிடம்

*நிதித்துறையின் ஆளுகைக்குட்பட்ட நிறுவனங்களில் பின்வரும் பணிநிலைகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.*

**கணக்காளர்** | **மேலாளர்** | **கணக்காய்வாளர்**

**பயிற்சிக்காலச் சம்பளம் 6500/=**

தகைமைகள்:

*1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வணிகமாணி அல்லது தொழில் நிர்வாகமாணிப் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.*

அல்லது

*2. உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா பூர்த்தி செய்திருக்க வேண்டும்.*

பொருத்தமானவர்கள் 05.01.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு யாழ். மாவட்ட வேலையற்றோர் பட்டதாரிகள் சங்க அலுவலகத்திற்கு வேண்டுகைகளுடன் சமூகம் தரவும்.

குறிப்பு:
09.12.2002ல் நடைபெற்ற நேர் முகத் தேர்வில் தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு பணியமர்த்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 16.01.2003 மதியம் 12.00 மணிக்கு முன்பாக ஆயப்பகுதி நடுவப் பணியகம், கிளிநொச்சிக்கு சமூகம் தரவும்.

நிதித்துறை.
தமிழீழ விடுதலைப் புலிகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி பராசக்தி சுப்பிரமணியம்

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி சுப்பிரமணியம் 29.12.2002 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மட்டுவில் சபாபதி சுப்பிரமணியத்தின் (ஓய்வுபெற்ற C.T.B. உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் பரமேஸ்வரன் (ஆசிரியர், மட்டுவில் மகாவித்தியாலயம்), வசந்தன் (சுவிஸ்), திருமாலினி (கனடா), கமலநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சறோஜாராணி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி - ஆசிரியர்), ரூபமதி (சுவிஸ்), உதயகுமார் (பொறியியலாளர், கனடா), மேனகா (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் சாருகா, சாஸ்வதன், விதுஷன், சாரங்கன், பிரதீபன், ஆரணி, வினோஜன், சாரஜன், நியூஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2003) வெள்ளிக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக,*
*இல.126, அரசடி வீதி,*
*யாழ்ப்பாணம்.* (12687)

தகவல்:
சு.பரமேஸ்வரன்
(மகன் - ஆசிரியர்)

## பண்பாட்டியல் முதுகலைமாணி மாணவர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஜன.3

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பண்பாட்டியல் முதுகலைமாணி மாணவர்களுக்கான பயிலரங்கு ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கற்கை நெறியைத் தொடரும் மாணவர்கள் அனைவரும் இதில தவறாது கலந்துகொள்ள வேண்டுமென கற்கை நெறி இணைப்பாளர் அறிவித்துள்ளார். (எ-5)

## குருமார் குருகுலம் 20 ஆம் திகதி திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.3

இந்து கலாசார அமைச்சினால் யாழ். ஆனைப்பந்தியில் அமைக்கப்பட்டுவரும் இந்துக் குருமார்களுக்கான குருகுலம் எதிர்வரும் 20ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

சுமார் 35லட்சம் ரூபா செலவில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட வகையில் அமைக்கப்பட்ட மேற்படி கட்டடத்தை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் திறந்துவைப்பார்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தக் குருகுலத்தில் அந்தண மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (எ-5)

## வீதிகளை புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

வலி.மேற்கு,ஜன.3

30 வருட காலமாகப் புனரமைக்கப்படாதுள்ள சுழிபுரம் சவுக்கடி வீதி மற்றும் திருவடிநிலை வீதி ஆகியவற்றைப் புனரமைப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென சம்பந்தப்பட்ட பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்படி வீதிகளை தினந்தோறும் 250இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர் என்றும்-

சேதமடைந்த நிலையில் காணப்படும் இந்த வீதிகள் அண்மையில் பெய்த பருவமழை காரணமாக பொதுமக்கள் பயணஞ்செய்ய முடியாதவாறு பலத்த சேதமடைத்துள்ளன என்றும் -

தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-175)

## செயலகத்தில் பணம் மாயம்!

யாழ்.செயலகத்தில் இயங்கும் மாவட்டப் புள்ளிவிவரக் கிளை அலுவலகத்தில் முக்கிய ஆவணங்களும், சம்பளப் பணம் ஒருதொகையும் காணாமற்போயுள்ளன.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

அன்றையதினம் காலை 10 மணியளவில் மாவட்டப்புள்ளிவிவரவியலாளர் சீ.சீ.வில்லியம்ராஜா தனது மேசையில் அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் உட்பட சில ஆவணங்களோடு, ஊழியர்கள் சிலரின் சம்பளக் கொடுப்பனவுக்காக வைத்திருந்த ரூபா இருபத்தெண்ணாயிரம் ரூபாவையும் கைப்பையோடு வைத்துவிட்டு வேறோர் இடம் சென்றுவிட்டுத் திரும்பிவந்து பார்த்தபோது அவை காணாமற்போயிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-75)

## தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரை 13ஆம் திகதி ஆரம்பமாகும்

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியின் 2003ஆம் கல்வி ஆண்டில் பதிவுசெய்த பகல் மற்றும் முழுநேர மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகும் எனக் கல்லூரி அதிபர் எஸ். செந்தில்நாதன் அறிவித்துள்ளார்.

## கலையகம் கல்வி நிலையம்

ஆவரங்கால்

*A/L 2005 கலை, வர்த்தக வகுப்புகள்*

ஆரம்பம்: 06.01.2003 திங்கள் 4.00p.m.

| | |
|---|---|
| கணக்கீடு | - S.தவா |
| பொருளியல் | - M.விக்கி |
| வர்த்தகம் | - S.யசோ |
| Logic | - S.R.J.சுதன் |
| தமிழ் | - A.கருணாகரன் |
| இ.நாகரிகம் | - M.செல்வரட்ணம் |
| புவியியல் | - S.R பாலா |
| நாடகமும் அரங்கியலும் | - S.T.J சுதன் |
| ஆங்கிலம் | - B.சசிகுமார் |

(12664)

## அறிவித்தல்

இடம்பெயர்ந்த நிலையில் யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் இயங்கிவந்த யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம் மீண்டும் நிரந்தர இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. எனவே, புதிதாகச் சேர விரும்புவோர் தரம் 1-தரம் 11 வரையான வகுப்புகளுக்கான அனுமதியை 08.01. 2003 ஆம் திகதிக்கு முன்பாகப் பெற்றுக்கொள்ளவும்.

அதிபர்.
*வேலணை மேற்கு.* யா/வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்.

(12678)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 1978-07-10 — உதிர்வு 2002-11-20

**அமரர் கனகசிங்கம் சண்முகதாஸ்**
*(யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானத்துறை மாணவன்)*

**திதி.04-01-2003**

துயரமே வாழ்வாய் துவள்கின்றோம்; இதுவோ நியதியென ஏங்குகின்றோம். உயிரின் உறவே! உன் ஆன்மா சாந்தியடைய ஸ்ரீ விசாலாட்சி சமேதர விசுவநாதப் பெருமானைப் பணிகின்றோம்.

அமரரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03-01-2003) வெள்ளிக்கிழமை கீரிமலையிலும், சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (04.01.2003) சனிக்கிழமை அமரரின் இல்லத்திலும் இடம்பெறவுள்ளன. புத்தூர் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண மதியபோசனத்தில் கலந்துகொண்டு, அன்னாரின் ஆன்மசாந்திக்கு பிரார்த்திக்கும் வண்ணம் உறவினர்கள், நண்பர்கள், அமரருடன் கல்விகற்ற மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பாக இதனை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*சிவன்கோவிலடி, புத்தூர்.* (12675) குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 04 - 04 - 1937



விண்ணில் 04 - 12 - 2002

**அமரர் மயிலு கதிரமலை**

பாசத்தின் ஒளியாய் ஒளிர்ந்த - ஐயா!
பாசத்தின் ஒளிவிளக்கே!
பாசத்தின் இனியமுகம் நாம் மறவோம்
நெஞ்சைவிட்டகலாது உங்கள் நினைவுகள்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி !

*ம.ம.வித்தியாலய வீதி,*
*நெல்லியடி.* (12673) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பஞ்சாட்சரம் நாகபூஷணி

(பாப்பாத்தி)

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சாட்சரம் நாகபூஷணி அவர்கள் 01.01.2003 புதன்கிழமை இத்தாலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - பொன்னம்மா அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற பஞ்சாட்சரம் ஐயா (கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தின் முன்னாள் ஐயர்) அவர்களின் அன்பு மனைவியும் தர்மலிங்கம், சடாசிவம், காலஞ்சென்ற குணபூசனம் மற்றும் கனகபூசனம் ஆகியோரின் சகோதரியும் இலம்போதரன் (ஜேர்மனி), பாகசாதனன் (ஜேர்மனி), காலஞ்சென்ற சட்பத்திரன் மற்றும் மங்கலேஸ்வரி, விக்கினேஸ்வரி (இத்தாலி), ஜஸ்சஸ்வின் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் லதா, இந்திரா, காலஞ்சென்ற மகிலீஸ்வரன் மற்றும் குமாரசாமி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இத்தாலியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.*
***T.P. No. 021 222 5210***
*இத்தாலி*
***T.P. No. 0039 0916519958*** (12679)

தகவல்:
தாஸ் (துரை-மைத்துனர்)

### தில்லையம்பலம் நாகலிங்கம்

(லிங்கா கட்டட ஒப்பந்தகாரர்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வடகிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் நாகலிங்கம் நேற்று (02-01-2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் சிவஅனுஷா, சுகிகரன், (ராசான் - ஹொலண்ட்), பாஸ்கரன் (பதிஸ் - ஜேர்மனி), அனுசா (ஆஸ்திரேலியா), சுயஅனுசா(ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும் மாலதி, வரதலிங்கம், புஸ்பகரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் வடகிழக்கு,*
*மானிப்பாய்.* (12682)

தகவல்:-
ஞா. கந்தசாமி
(மைத்துனர்)

# ஸிம்பாப்வே சுற்றுலாவைத் தவிர்ப்பதற்கு 10 மில்லியன் பவுண்கள் தரவேண்டும்

## பிரிட்டிஷ் அரசிடம் இங்கிலாந்து கிரிக்கெட் சபை கோரிக்கை

ஸிம்பாப்வேயில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டியில் பங்குபற்றாதிருக்க வேண்டுமானால், தமக்கு 10 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களை அரசு வழங்க வேண்டும்.

- இவ்வாறு இங்கிலாந்து - வேல்ஸ் கிரிக்கெற் சபை (ஈ.சி.பி.) கோரியுள்ளது.

ஸிம்பாப்வேயின் அரசியல் சர்ச்சைகள் காரணமாக அந்நாட்டிற்கு இங்கிலாந்து அணி விஜயம் செய்யக்கூடாது என பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது.

அரசின் அந்த ஆலோசனையை ஏற்று நடந்தால் போட்டி ஏற்பாட்டாளர்களான ஐ.சி.சி. நம்மிடம் நஷ்டஈடு கோரலாம் என இங்கிலாந்து - வேல்ஸ் கிரிக்கெற் சபை எதிர்பார்க்கிறது.

இது தொடர்பாக கிரிக்கெற் அதிகாரிகளும் பிரிட்டிஷ் அமைச்சர்களும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர்.

"ஸிம்பாப்வேயில் போட்டியில் பங்குபற்றவேண்டிய எமது கடப்பாட்டை நாம் விளக்குவோம். அதன் பின்பு இவ்விடயத்தில் அரசாங்கம் என்ன கூறுகிறது என்பதைக் கேட்போம். வருடமொன்றுக்கான எமது வருமானம் 65மில்லியன் பவுண்கள். இதுவொரு சிறிய வர்த்தகம். இந்நிலையில் 10 மில்லியன் நஷ்டத்தை எம்மால் ஏற்கமுடியாது.

- இவ்வாறு இங்கிலாந்து கிரிக்கெற் சபையின் வர்த்தக விவகார இயக்குநர் ஜோன் ரீட் கூறினார்.

இதேவேளை - இங்கிலாந்து அணி, ஸிம்பாப்வேக்கு விஜயம் செய்ய மறுத்தால், எதிர்வரும் மே மாதம் ஸிம்பாப்வே அணி தனது இங்கிலாந்து விஜயத்தை ரத்துச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்து அணியுடன் இரு டெஸ்ட் போட்டிகளிலும் இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகளுடன் முக்கோண ஒருநாள் சுற்றுப்போட்டியொன்றிலும் ஸிம்பாப்வே அணி மோதவுள்ளது.

"இப்போட்டிகள் ரத்துச் செய்யப்பட்டால், இத்தொடருக்கான அனுசரணையாளர் நஷ்டஈடு கோரக்கூடும்.

- இவ்வாறு ஜோன் ரீட் மேலும் கூறினார்.

ஸிம்பாப்வே அணிக்கு மாற்றாக பாகிஸ்தான் அல்லது நியூஸிலாந்து அணியை அழைப்பதற்கு இங்கிலாந்து கிரிக்கெற் சபை பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது.

இப்பேச்சு வெற்றி பெற்றாலும் இம்மாதத்திற்கு ஒரு மில்லியன் பவுண் செலவாகும் எனக் கணிக்கப்படுகிறது.

உலகக் கிண்ணப் போட்டிகளின் மூலம் தமக்கு 4 மில்லியன் பவுண் வருமானம் கிடைக்குமென இங்கிலாந்து எதிர்பார்க்கிறது. ஆனால், ஐ.சி.சி. நஷ்டஈடு கோரினால் இந்த எதிர்பார்ப்பு கைகூடாமல் போகலாம்.

ஸிம்பாப்வே போட்டிகளில் பங்குபற்றுவதற்கு ஏற்கனவே இந்தியா, பாகிஸ்தான் ஆகியன சம்மதம் தெரிவித்துவிட்டன.

ஆஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹேவார்ட்டும் ஸிம்பாப்வே விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறார். எனினும், சுற்றுலாவைக் கைவிடும்படி ஆஸி. கிரிக்கெற் சபையை தமது அரசாங்கம் வலியுறுத்தமாட்டாது என அவர் அறிவித்துள்ளார்.

ஆனால், ஸிம்பாப்வே போட்டியைப் பகிஷ்கரிப்பதற்கு ஆஸ்திரேலிய கிரிக்கெற் சபை தீர்மானித்தால் இங்கிலாந்து கிரிக்கெற் சபையும் இதைப் பின்பற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"ஸிம்பாப்வேக்கு விஜயம் செய்ய வேண்டாமென பிரிட்டிஷ் அரசாங்கம் கட்டளையிட்டால் இங்கிலாந்து அணி கீழ்ப்படிய மறுக்கமாட்டாது."

- இவ்வாறு இங்கிலாந்து வேல்ஸ் கிரிக்கெற் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரிம்லேம்ப் தெரிவித்துள்ளார். (ஒ-5)

# ஹொக்கி சுற்றுப் போட்டியில் யாழ்.பல்கலை. சம்பியன்

யாழ்ப்பாணம்,ஜன.3

7பேர் கொண்ட அணிகளுக்கிடையே சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் நடத்திய ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி சம்பியன் கிணணத்தை சுவீகரித்துக்கொண்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணி கிறாஸ் கொப்பர்ஸ் அணியை 'பனால்டி' உதைமுறைமூலம் 1:0 என்ற கோல் அடிப்படையில் வென்று சம்பியனானது.

ஆட்டமுடிவின்போது இரு அணிகளும் 2:2 என்ற கோல் அடிப்படையில் சமநிலையில் இருந்தன.

இதனால் வழங்கப்பட்ட மேலதிக நேரத்திலும் இரு அணிகளும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை.

அதனைத் தொடர்ந்து வழங்கப்பட்ட 'பனால்டி' முறைமூலம் 1:0 என்ற அடிப்படையில் யாழ். பல்கலைக்கழக அணி வெற்றி பெற்றது.

முன்னதாக இடம்பெற்ற மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் வட்டுக்கோட்டை ஓல்ட் கோல்ட்ஸ் அணி அதனை எதிர்த்து விளையாடிய கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை வென்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (ஒ-5)

# உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும், நாவாந்துறை சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

அண்மையில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரை இறுதி ஆட்டங்களில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் அதனை எதிர்த்து விளையாடிய குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தை 2:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

மற்றோர் அரை இறுதி ஆட்டத்தில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் அதனை எதிர்த்து விளையாடிய பொற்பதி விளையாட்டுக்கழகத்தை 2:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

இவ்விரு அணிகளுக்குமிடையிலான இறுதிப் போட்டி எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ஒ-5)

# மீண்டும் ஒருதடவை இந்திய அணி தோல்வி

இந்திய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியின் மூன்றாவது ஆட்டத்திலும் இந்திய அணி தோல்வியுற்றது.

நேற்றுமுன்தினம் கிறைஸ்ட் சேர்ச்சில் நடைபெற்ற இப்போட்டியில் நியூஸிலாந்து அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணியை வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 41.8 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 108 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் அதிகபட்ச ஓட்டங்களாக ராகுல் ட்ராவிட் 20 ஓட்டங்களையும், முகமட் கைவ் 17 ஓட்டங்களையும் பெற்றனர். இந்திய அணி உதிரி ஓட்டங்களாக 22 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நியூஸிலாந்து பந்துவீச்சு சார்பாக தௌ.்.பி, ஓராம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், பி.ஹித தொக் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 26.5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்காகிய 109 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நதன் ஆஸ்லே 32 ஓட்டங்களையும் டி.மெக்மிலன் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். இந்திய பந்துவீச்சாளர்களில் அஜித் அகார்கர் 3 விக்கெட்டுக்களையும் ஸ்ரீநாத், சஹீர்கான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

டெரல் தௌ.்.பி இவ் ஆட்டத்தின் சிறப்பாட்டக்காரராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டியில் நியூஸிலாந்து விக்கெட் காப்பாளர் 5 பேரை பிடி எடுத்து ஆட்டமிழக்கச் செய்ததன்மூலம் அடம் பரோரேயின் முன்னைய உலக சாதனையை சமப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை நடைபெற்ற மூன்று போட்டிகளிலும் நியூஸிலாந்து வெற்றி பெற்று 3-0 என்ற நிலையில் முன்னணியில் உள்ளது. (ஒ-5)

# நல்லூர் பிரதேச வி.கழகங்களுக்கு

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி ஆர்.இரத்தினராசா தலைமையில் இடம்பெறும் இக்கலந்துரையாடலில் அனைத்து விளையாட்டுக் கழகங்களினது பிரதிநிதிகளைக் கலந்துகொள்ளும்படி பதில் விளையாட்டு உத்தியோகத்தர் ஆர்.மோகனதாஸ் வேண்டியுள்ளார். (ஒ-86)


அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | |
|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 436 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
| திகதி | 31.12.2002 | செல்லுபடியாகும் தொடர் இல. 4659523-4674199 |

வெற்றி இலக்கங்கள் 17 27 30 52

லக்கினம் விருச்சிகம்



ஜக்பொட் பரிசு ரூபா. 1,659,700/- வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 2,391,800/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 32,7864 | 10 | 3,278,640 |
| 2 இலக்கங்கள் | 30,056 | 20 | 601,120 |
| 1 இல + லக்கினம் | 29,733 | 30 | 891,990 |
| 2 இல + லக்கினம் | 2,797 | 100 | 279,700 |
| 3 இலக்கங்கள் | 810 | 500 | 405,000 |
| 3 இல + லக்கினம் | 62 | 5,000 | 310,000 |
| 4 இலக்கங்கள் | 05 | 100,000 | 500,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,659,700 | - |
| மொத்தம் | 391,327 | - | 6,266,450 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,266,450/-

தொடர் இல. 5654482க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஜனவரி 03ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் பஜாஜ் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4668432-5-22
4668078-0-55
4662338-8-78
4661607-4-67
4665723-4-43

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

PHOENIX O&M

சனிக்கிழமை அதிர்ஷ்டம்





உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2312215 இருந்து 2328725 வரை

சீட்டிழுப்பு இல. 1363

திகதி 01.01.2003

வெற்றி எண்கள் 01 24 32 49 53

போனஸ் எண் 38

ஜக்பொட் பரிசு ரூபா.1,500,000/- வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 90 | 10,000/- | 900,000/- |
| 3 | 5,385 | 500/- | 2,692,500/- |
| 2 | 86,977 | 20/- | 1,739,540/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 01ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 106,591 | 10/- | 1,065,910/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,497,950/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா. 2,325,400/-

தொடர் இல. 3308831க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 ஜனவரி 04ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2318468-7-31
2313771-9-98
2316888-3-67
2314703-2-04
2313056-0-73

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

PHOENIX O&M

உ

# மூத்தநாயனார் கோயில்/சத்திரம்

**MOOTANAINAR TEMPLE & CHATTARAM TRUST**

**(Anaicoddai)**

ஆனைக்கோட்டை மூத்த நாயனார் கோயில் தர்மகர்த்தா வினால் பழைய நிர்வாகம் கலைக்கப்பட்டு, தர்மகத்தாவின் நேரடி, மேற்பார்வையின்கீழ் கோயிலின் புதிய நிர்வாகத்தைச் செய்வதற்குத் தீர்மானித்துள்ளதின்படி 01.01.2003 முதல்

திரு.க.கதிரேசன் மாஸ்டர் முகாமையாளர் *(மனேஜர்)*
திரு.P.ஸ்ரீபாஸ்கரன் உதவி முகாமையாளர் *(உதவி மனேஜர்)*
திரு.P.பிரபாகரன் உதவி முகாமையாளர் *(உதவி மனேஜர்)*

ஆகிய மூவரையும் நியமித்துள்ளோம் என்பதனை உபயகாரர் களுக்கும், இக்கோவிலுக்குவரும் பக்தர்களுக்கும் தெரியப்படுத்து கிறோம்.

*இக்கோயிலுக்கு நன்கொடை செலுத்த விரும்பும் பக்தர்கள் இவர்களிடமோ அல்லது*

**Commercial Bank of Ceylon Limited,**
**98, York Street, Colombo-01, Sri Lanka.**

என்ற முகவரிக்கு

*Mootanainar Temple & Chattaram Trust*

*Account No.1503186901* என்ற கணக்கிலக்கத்திற்குச் செலுத்தவும்.

**இரத்தினசபாபதி, தியாகராஜா.**
*தர்மகர்த்தாக்கள்*

Head Office,
221, SEA STREET,
COLOMBO - 11.
T.P.: 435154

(12654)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 11 - 02 - 1939



மறைவு 04 - 12 - 2002

**அமரர் சேகரம்பிள்ளை கந்தசாமி (இரத்தினம்)**

*அன்பெனும் சோலையிலே*
*ஆவலெனும்செடி முளைத்து*
*பணிவெனும் பூப்பூத்து*
*பாசமெனும் காய்காய்த்து*
*கனியாக வந்த - எமது*
*அன்புத் தெய்வத்தினது - ஆத்மா*
*சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

(12662)

*ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.* மனைவி, பிள்ளைகள்.



# கண்ணீர் அஞ்சலி

எங்கள் பணிப்பாளர் சபை உறுப்பினர்
சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜா குருக்கள்
அவர்களின் கனிஷ்ட புத்திரன்

**செல்வன் சோ.சிற்பவன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர் சபை உறுப்பினர்களும்,
சைவச் சிறுவர் இல்லச் சிறார்களும்,
சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
*கலாசாலை வீதி, திருநெல்வேலி.*

(12665)



# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் ஆசிரியை
அருட்சகோதரி டொறின் சாந்தகுமாரி
அவர்களின் அன்புத் தந்தை

**திரு.ஆசீர்வாதம் பிலிப்பையா**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
ஊழியர்கள்.

யா/திருக்குடும்பக் கன்னியர் மடம். (12666)



# கண்ணீர் அஞ்சலி

யா/சென். மேரிஸ் வித்தியாலய ஆசிரியை
திருமதி சு.அருளானந்தம் அவர்களின் தாயார்

**திருமதி க.மீனாட்சியம்மா**

அவர்கள் 30. 12. 2002 இல் கொழும்பில் சிவபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/சென்.மேரிஸ் வித்தியாலயம்.

(12657)



## ஜெசித்தாரா

நாங்கள் ரெடி! நீங்கள் ரெடியா?
புதுவருடத்துக்கான உங்கள் ஸ்பெஷல்!
★ *'ஒவ்போடு' சிக்கன் காலிக் புரியாணி with masala!*
★ *விலை 125/- ரூபா மட்டுமே!*
✩ நிச்சயமாக ஓடர்களுக்கு மட்டும்!
மற்றும் வழமையான உணவுப் பொதிகள் வழமைபோல!
கிடைக்கும் நேரம் நண்பகல் 12மணி தொடக்கம் 3மணிவரை.
உங்களுக்கான உங்கள் விருந்தகம்

**ஜோ.எகட்டனின் ஜெசித்தாரா**

19/3, கண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை.
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


# திறந்த பல்கலைப் பதிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.3

திறந்த பல்கலைக்கழகங்களின் யாழ். பிராந்திய நிலையத்தில் நடத் தப்படுகின்ற சிறுவணிக முகாமைத் துவக் கற்கைநெறிக்கு விண்ணப் பித்த மாணவர்களுக்கான பதிவுகள் எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளன.

மேற்படி கற்கைநெறிக்கு விண் ணப்பித்த அனைவரும் திறந்த பல் கலைக்கழக பிராந்திய நிலையத் துக்கு தவறாது சமுகமளித்து பதிவு களை மேற்கொள்ளலாம் என அறி விக்கப்பட்டுள்ளது. (எ-5)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் துயர்பகிர்தலும்

04.12.2002 அன்று இறையடி சேர்ந்த உடுவில் கமநல சேவைக்குழு உறுப்பினரும் உடுவில் வட.மத்தி விவசாய சம்மேளனத் தலைவருமான திரு. தானியேல் பத்திநாதர் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் பிரகாசம் தானியேல்**

அவர்கள் இறைபதமடைந்த 31ஆம் நாளான இன்று அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கமநல சேவைக் குழுவும்
நிலைய உத்தியோகத்தர்களும். (12668)

**கமநல சேவைகள் நிலையம், உடுவில்.**



# தமிழீழ வைப்பகம்
# பணிநிலை வெற்றிடம்

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**01.** *பணிநிலை* :- அலுவலர் பயிலுநர்

*தகைமை* :- ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் வணிக/முகாமைத்துவ/விவசாய/கணிதப் பட்டதாரியாக இருக்கவேண்டும்.

அல்லது

ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றின் H.N.D.A. கற்கைநெறியில் தேர்ச்சி அடைந்தவராக இருக்கவேண்டும்.

*ஊதிய அளவுத் திட்டம்* :- 4,500+4,000 (8,500/=)

*அகவை எல்லை* :- 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்கவேண்டும்.

வேண்டுகையர்கள் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட தன்விளக்கங்கள் (சுயவிவரம்) அடங்கிய படிவத்துடனும் தேவையான ஆவணங்களுடன்,

☛ யாழ்.குடாநாட்டு வேண்டுகையர்கள் வரும் 2003-01-10ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கண்டி வீதி, பளையில் இயங்கும் தமிழீழ வைப்பகப் பணிமனைக்கு வருகை தரவும்.

☛ ஏனைய பிரதேச வேண்டுகையர்கள் வரும் 2003-01-16ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு 09ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு என்னும் முகவரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப் பணியகத்திற்கு வருகைதரவும்.

**02.** *பணிநிலை* :- ஊர்தி ஓட்டுநர் தரம் 03

*தகைமை* :- 10ஆம் தரம் சித்தியடைந்தவராகவும் ஊர்தி ஓட்டுநர் அனுமதிப்பத் திரமுடையவராகவும் இருக்கவேண்டும்.

*ஊதிய அளவுத் திட்டம்* :- $\frac{3,310 - 4,510}{60X20}$ + 4,000 (7,310 - 8,510)

*அகவை எல்லை* :- 25 - 35

வேண்டுகையர்கள் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட தன்விளக்கங்கள் (சுயவிவரம்) அடங்கிய படிவத்துடனும் தேவையான ஆவணங்களுடனும் வரும் 2003.01.16ஆம் நாள் வியாழக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு 09ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு என்னும் முகவரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப் பணியகத்திற்கு வருகைதரவும்.

**03.** *பணிநிலை* :- உத்தியோக உதவியாளர் தரம் 03

*தகைமை* :- க.பொ.த. (சாதாரணதர) தேர்வில் கணிதம், தமிழ் உட்பட 05 திறமைச் சித்தியுடன் குறைந்தது 06 பாடங்களில் ஒரே அமர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதுடன், க.பொ.த. (உயர்தரம்) தேர்வில் ஒரே அமர்வில் 03 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

*ஊதிய அளவுத் திட்டம்* :- $\frac{3,670 - 5,070}{70X20}$ + 4000 (7,670 - 9,070)

*அகவை எல்லை* :- 19 - 25

**04.** *பணிநிலை* :- அலுவலக உதவியாளர் தரம் 03

*தகைமை* :- க.பொ.த. (சாதாரணதர) தேர்வில் கணிதம், தமிழ் உட்பட குறைந்தது 06 பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.

*ஊதிய அளவுத் திட்டம்* :- $\frac{2,870 - 4,070}{60X20}$ + 4,000 (6,870 - 8,070)

*அகவை எல்லை* :- 18 - 25

எண் 03, 04 என்பவற்றிற்குரிய வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் பூர்த்திசெய்யப் பட்டுக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் *"உத்தியோக உதவியாளர் தரம் 03 ஆட்சேர்ப்பிற்கான வேண்டுகை" / "அலுவலக உதவியாளர் தரம் 03 ஆட்சேர்ப் பிற்கான வேண்டுகை"* எனக் குறிப்பிட்டு 2003.01.20ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல்வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும் மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலாளர் (ஆளுகை)**
*ஆளணிப்பகுதி, நடுவப்பணியகம்,*
*தமிழீழ வைப்பகம், புதுக்குடியிருப்பு.*

(C/25798)

# உள்ளத்தில் ... ன்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டுள்ள நிலைப்பாடுகளிலிருந்து மாறி, இப்போது முஸ்லிம்களை ஓரங்கட்ட முயலக்கூடாது. முஸ்லிம்களை ஓரங் கட்டிவிட்டு இப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.

வடக்கு - கிழக்கில் வாழும் பிரதானமான - முக்கியமான - இனமக்களில் முஸ்லிம்களும் அடங்குவர்.

வடக்கு - கிழக்கு, தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் தாயகம் என்பதை ஏற்கனவே புலிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர். அந்தத் தாயகத்தில் வாழ்கின்ற இரண்டு இனங்களில ஒன்றான முஸ்லிம்களுக்கு, அவர்களின் அடையாளத்தை பேணிக்கொண்டு சமாதானப் பேச்சில் பங்குபற்றுகின்ற ...ப்பைத் தரமுடியாது என்று மறுப்பது தார்மீக நடவடிக்கை அல்ல.

ஆ...ந்தாங்கிப் போராடினால் மட்டும் ... அங்கீகாரம் என்ற நிலைப்பாட... டுப்பது ஆபத்...து.

இவர்கள் (புலிகள்) அப்படியொரு நிலைப்பாட்டை எடுப்பது முஸ்லிம்களை ஓரங்கட்ட-முஸ்லிம்களின் பாரிமாணத்தை பூரணமாக மழுங்கடிக்கும்-முயற்சி.இதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

இந்த அரசை ஆட்சிக்குக்கொண்டு வந்ததிலும், இந்தச் சமாதானத் சூழலை ஏற்படுத்தியதிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்"க்கு இருந்த பங்களிப்பை மறந்து இவர்கள் செயற்பட முடியாது.

இந்தப் பிரச்சினையை நாம் இரு தரப்பும் பேசித் தீர்த்துக்கொள்ளலாம்.

தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்கள் மூலம் அல்லது ஒரு தரப்பினை இவ்வாறு வி... பதன் ... முஸ்லிம்களை ஒரு தரத் ... குறைத்து மதிப்பிடுவது பயனற்றது.

தற்போதைய தீர்வு முயற்சி இரண்டு தேசியங்களுக்கு இடையிலான பிரச்சினை சம்ப... து என்று அடையாளப்படுத்தி... - கிழக்கு என்ற பூ... தில் முஸ்லிம்கள் என்ற ஒ... மும் வாழ்கின்றது என்பதை மறந்துவிடக்கூடாது.

அந்தத் தேசியத்துக்கென்றும் ஒரு சுயநிர்ணய உரிமை உள்ளதென்பதை மறுப்பது, முழுப்பூசனிக்காயை பலவந்தமாக சோற்றுக்குள் மறைப்பது போன்றதாகும் என்றார் அமைச்சர் ஹக்கீம். நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைத் தான் சந்தித்து பேசியதாகக் ஹக்கீம் தெரிவித்தார்.

(ஐ-12)


## பொருளியற் கல்லூரி

பெருமாள் கோவில் அருகில், நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
இணுவில் மத்திய கல்லூரி அருகில், கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

இரு இடங்களிலும்

A/L 2005

கலை, வர்த்தகப் பிரிவுகள்

ஆரம்பம்: நாளை (04.01.2003) சனி

| பாடம் | யாழ்ப்பாணம் | இணுவில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P.சர்மா | R.P.சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் |
| நாடகமும் அரங்கியல் | சுகந்தன் | சுதன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| அரசியல் | கியூபேட் | கியூபேட் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

யாழ்நகரில் - கலைப்பிரிவு - 9மணி
வர்த்தகப் பிரிவு - 10மணி
இணுவிலில் - கலைப்பிரிவு - 8மணி
வர்த்தகப் பிரிவு - 3மணி

(12380)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னுத்துரை அன்னபூரணம்

கொக்குவில் கிழக்கு, நந்தாவில் லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை அன்னபூரணம் நேற்று (02.01.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னையா - பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் சபாரத்தினம் (இளைப்பாறிய ஆசிரியர், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), இரத்தினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரத்தினம், ஞானசவுந்தரி, காலஞ்சென்ற தருமலிங்கம் (வர்த்தகர் காலி S.S.T) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சரஸ்வதிதேவி, விக்கினேஸ்வரன் (வர்த்தகர், சண்முகன் வர்த்தக நிலையம், குளப்பிட்டி, கொக்குவில்), சண்முகநாதன் (வர்த்தகர், ராணி ஸ்ரோர்ஸ், காலி), நளினாதேவி -(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சண்முகலிங்கம், இந்திராதேவி, இராசேஸ்வரி, சுகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜனகன், கஜனன், கனீசியா, கனிஸ்வினி, அனுத்திரிகா, கஸ்தூரிகா (யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி), சஞ்ஜிதா, நௌசிகா (யாழ்.கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), பிரவீனன், கௌசிகன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (04.01.2003) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*நந்தாவில்,*
*கொக்குவில் கிழக்கு,கொக்குவில்.*
*(T.P. 021 222 2637)*
(12691)

தகவல்:
பொ.விக்கினேஸ்வரன் (மகன்)

## வல்லிபுரம் வேலாயுதம்

இல.87A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் வேலாயுதம் நேற்று (02-01-2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வல்லிபுரம் செல்லம்மாவின் மகனும் காலஞ்சென்ற வைத்திலிங்கம் முத்துபிள்ளையின் மருமகனும் அரியநாயகம்(பட்டு-ஜேர்மனி), கமலாதேவி(பிரான்ஸ்), இராசநாயகம்(சுகாதார உத்தியோகத்தர், யாழ்.மாநகரசபை), செல்வநாயகம்(பாகிஸ்தான்), குணநாயகம், சுசிலாதேவி(பிரான்ஸ்), பிறேமச்சந்திரன்(பிரான்ஸ்), நாகேஸ்வரி(தேவி-பிரான்ஸ்), சுலோசனாதேவி(ஹொலண்ட் - பேபி), உதயகுமார்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், நாகம்மா மற்றும் சண்முகம், யோகம்மா, மகேஸ்வரி, வைத்திலிங்கம் (மணியம்), முத்துலிங்கம், அம்பலவாணர், சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும் இராசையா, பாக்கியம் (சரஸ்வதி), காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் குருசாமி, தவமணி, துரைச்சாமி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற பாக்கியராசா மற்றும் குணசேகரம்(பிரான்ஸ்), சந்திரசேகரம்(பிரான்ஸ்), சிவராசா(ஹொலண்ட்), பிறேமளா, ரஞ்சி, புளோறிடா (ஜெசி-பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04-01-2003) சனிக்கிழமை பிற்பகல் 2.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.87A, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(12693)

தகவல்:
குணம்(மகன்), பிள்ளைகள்.

## திருமதி விசாலாட்சி மகேஸ்வரசர்மா

சுன்னாகம் மயிலணியைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை புகுந்த இடமாகவும் கொண்ட திருமதி விசாலாட்சி மகேஸ்வரசர்மா நேற்றிரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரசர்மாவின் (சோமவ மகேசன்-சுதந்திரன் (முன்னாள் ஆசிரியர்) அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2003) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

*வீரபத்திரர் கோயில்,*
*கோப்பாய்.*
(C/25809)

தகவல்:
சோ.கி.பிரணதார்த்திஹரக்குருக்கள்
(மைத்துனர்)


**BARATHY**
கல்வி நிறுவனம்
சித்தன்கேணி
A/L 2005
கலை, வர்த்தகம்
ஆரம்பம்:
வர்த்தகப்பிரிவு - 4.1.2003
சனி - 2 மணி
கலைப்பிரிவு - 6.1.2003
திங்கள் - 3.15
(12380)

இதோ...மீண்டும்...உங்கள்
"கல்வியே கண் மற்றெல்லாம் பின்"
**ஏசியன்**
அக்கடமி
கேணியடிச் சந்தி,
கொக்குவில் மேற்கு.
தரம் 01 முதல் O/L
வரையிலான 2003
இற்கான வகுப்புகள்
சிறப்பாக நடைபெறுகின்றன.
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(12579) - இயக்குநர்.

A/L 2005
கணித-உயிரியல் பிரிவு
PHY. - K.றமேஸ்(B.Sc.)
CHE. - K.பவன்(B.Sc.)
CO.MAT. - G.ஐங்கரன்(B.Sc.)
BIO. - P.அருண்(M.Sc.)
ஆரம்பம்-04-01-2003 8.00 a.m
Note:-
கலை, வர்த்தக பிரிவு வகுப்புகள்
O/Lபெறுபேறுவரும்வரை இலவசம்.
திகழ் கல்வி நிறுவனம்,
K.K.S. வீதி, இணுவில்.
(12684)

கிராம அலுவலர்(G.S) தரம் II
போட்டிப் பரீட்சை
பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம்: 04.01.2003
10 மணி a.m
(சனி, ஞாயிறு)
நியூட்டன்
ஆரிய குளம் சந்தி -யாழ்நகர்
(12685)

நிறஞ்சனாஸ்
சங்கானை
அஜித் (இருவேடம்), மீனா நடித்த
வில்லன்
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00 (பு.நே.)

நாகம்ஸ் - சுன்னாகம்
அர்ஜுன்,சிம்ரன், மும்தாஜ்,
ஆனந்தராஜ் நடித்த
ஏழுமலை (ரீலஸ்)
காட்சிகள்:11.00, 3.00 (பு.நேர)
இன்றும் நாளையும்
6.30 காட்சி Air Force One

லக்ஷ்மி இணுவில்
விஜய், சிந்து, ரோஜா, மணிவண்ணன்
நடித்த
நெஞ்சினிலே (ரீலஸ்)
தினசரி 10.30, 2.30, 6.30 (பு.நே.)

ராஜா யாழ்ப்பாணம்.
முரளி, ராதிகா சௌத்திரி,
வடிவேலு, மணிவண்ணன்
நடித்த
சுந்தரா ட்ராவல்ஸ்
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30


# மரண அறிவித்தல்கள்

## நமசிவாயம் கார்த்திகேசு (தூபலார்)

**(நல்லூர் கந்தசுவாமி கோயில் தூபத் திருப்பணி அன்பர்)**

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் கார்த்திகேசு நேற்று(02.01.2003) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(03.01.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*882, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர்.*
(C-25807)

தகவல்:
குடும்பத்தினர்

## திருமதி அடைக்கலமேரி யேசுதாசன்

*(ராணி)*

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட யாழ்ப்பாணம், டேவிற் வீதியைச் சேர்ந்த ஹெந்தலை, வத்தளையைத் தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி அடைக்கலமேரி யேசுதாசன் (ராணி) நேற்று (02.01.2003) வியாழக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சு.யேசுதாசன் (முன்னாள் விலைக்கட்டுப்பாட்டு பொறுப்பதிகாரி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் நெடுந்தீவைச் சேர்ந்த காலஞ்சென்ற லோறன்ஸ் சவிரிமுத்து (செல்லர்) - மாசில்லாமணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற சுவக்கீன் வைத்தியானா தம்பதியினரின் மருமகளும் அன்ரனி றூபா (ஆசிரியை, ஹுனுப்பிட்டிய முஸ்லிம் வித்தியாலயம், வத்தளை), நிர்மலராஜ் (றொபின், நீர் வேலைப்பகுதி, யாழ்.மாநகரசபை), தெய்வேந்திரராஜ் (கொலின்), பேபி செல்வராணி, ஜெயானந்தராஜ் (யூஜின்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆஸ்லி தர்மநாயகம், பத்மலோஜினி, லக்ஷினி, நிமல்ராஜ் (ரமேஷ்) ஆகியோரின் மாமியாரும் தியாகராசா (பப்பிளி), மரியமகேஸ்வரி (ராசாத்தி), கொலஸ்ரிக்கா (வர்ணம்), மேரி றேமண்ட் (பிறேமா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜமுனாராணி, குணநாயகம், கிங்ஸ்லி, செல்வநாயகம் (சீ - மாமா) ஆகியோரின் மைத்துனியும் டிலான், மினா, ஜோன் கிறிஸ்றி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 56, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்திலிருந்து நாளை (04.01.2003) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ்.கொஞ்செஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*56, டேவிற் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(12689)

தகவல்:
நிர்மலராஜ்
(றொபின் - மகன்)

## சவிரிமுத்து சூசைதாசன் *(தாசன்)*

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான சவிரிமுத்து (வைத்தியர்) சூசைதாசன் அவர்கள் 28.12.2002 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய திரு.திருமதி சவிரிமு... தம்பதிகளின் அன்புப் புதல்வரும் றெஜீனாவின் அன்புக் கணவரும் சதீஸ் (பிரான்ஸ்), நிறஞ்சலா (சுவிஸ்), ஜெயந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்ரோவின் (சுவிஸ்) பாசமிகு மாமனாரும் அன்ரோனியின் (சுவிஸ்) அன்புப் பேரனும் உடன் பிறப்புக்களான மரியதாசம்மா (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜேசுதாஸ் (தபால் அதிபர்) மற்றும் சேவியர்தாஸ் (இந்தியா), அன்ரனி தாசம்மா (குங்கு - யாழ்ப்பாணம்), ஜேம்ஸ்தாஸ் (மன்னார்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 05.01.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மாதம்பிட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*208/8, மோதர வீதி,*
*கொழும்பு - 15.*
*Tel. 522578*
(12686)

தகவல்:
சூ.றெஜீனா (மனைவி), பிள்ளைகள்,
பாசமிகு மைத்துனர் சைமன் எபிக்ரர்.

## செல்லையா இராமலிங்கம்

அல்லிப்பளை, பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது மடத்தடி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராமலிங்கம் அவர்கள் நேற்று (02-01-2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் பரிமளராணி, திலகராணி, பிறேமராணி(பிரான்ஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்) காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் வசந்தராணி(இத்தாலி), ஜெயராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பஞ்சராசா மற்றும் குணராசா, யோகநாதன்(பிரான்ஸ்), நல்லதம்பி(இத்தாலி), சறோஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெனகராஜ், வேல்ராஜ், பவித்திரா, தனுராஜ்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03-01-2003) வெள்ளிக்கிழமை 11.00மணியளவில் அன்னாரின் தற்காலிக இல்லமான மடத்தடி, சாவகச்சேரியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*த.முகவரி:-*
*மடத்தடி,*
*சாவகச்சேரி.*
(12688)

தகவல்:-
கு.குணராசா(மருமகன்) ப.பரிமளராணி(மகள்)
(அல்லிப்பளை, பளை)

# மின் கம்பிகள் தீக்கிரை

சிறுப்பிட்டிப் பகுதியில் மின்சார வயர்கள் விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டதில் 150 இற்கும் மேற்பட்ட மின் பாவனையாளர்களுக்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு சிறுப்பிட்டிப் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

எரிக்கப்பட்ட வயர்களின் பெறுமதி 14 ஆயிரம் ரூபா என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விஷமத்தனமான நடவடிக்கையில் ஈடுபட்டவர்களைத் தேடிப் பிடிக்க தீவிர முயற்சி எடுக்கப்பட்டிருப்பதாக அச்சுவேலி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அன்ரன் மத்தியூ தெரிவித்தார். (ஜ-180)


JAFFNA TECHNICAL INSTITUTE SRILANKA JTI

இந்த ஆண்டுக்கான பயிற்சிநெறி பற்றிய விவரம் - 08ஆம் பக்கத்தில் (C/25792)


## சமுர்த்தி வங்கி ஏற்பாட்டுக் கூட்டம்

கோப்பாய் மத்தி கிராமஅலுவலர் பிரிவில் ஆரம்பிக்கப்படவுள்ள சமுர்த்தி வங்கி தொடர்பான கூட்டம் இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வலிகிழக்கு பிரதேச செயலர் பிரிவில் நீர்வேலி பகுதி மக்களுக்காக தேசிய வறுமை ஒழிப்புத்திட்டத்தின் கீழ் இந்த வங்கி ஆரம்பிக்கப்படவுள்ளது. (ஜ-ரி)

## காட்டில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் இவரது சடலம் மீட்கப்பட்டது. சடலத்தின் மீது கழிவு ஓயில் ஊற்றப்பட்டிருந்தது.

வவுனியா - மன்னார் வீதியில் உள்ள செங்கடிப் பிளவைச் சேர்ந்த இந்தப் பெண்ணை, கடந்த 29 ஆம் திகதி முதல் காணவில்லை எனப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்று மாலை விறகு வெட்டச் சென்ற நபர் ஒருவர் வழங்கிய தகவல்களையடுத்து பெண்ணின் சடலம் மீட்கப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

பெண் அணிந்திருந்த நகைகள் காணாமற் போயிருந்தன.

இந்த மரணம் தொடர்பாக பூரண விசாரணை நடத்தப்பட வேண்டும் என வவுனியாவில் உள்ள பெண்கள் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (ஜ-3-12)

## பிரதமரின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.அரச அதிபரின் ஏற்பாட்டில் பிரதமரின் அலுவலகத்தில் நடைபெறவுள்ள இச்சந்திப்பில், பாதுகாவலர் சங்கத்தின் இணைத் தலைவர் த.விஜயகுமார் தலைமையிலான ஏழு உறுப்பினர்கள் பங்குபற்றவுள்ளனர்.

இச்சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் கே.ஜெயரட்ணம் ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர்.

இச்சந்திப்பின்போது பாதுகாவலர் சங்கம் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கவுள்ளது.

★ வன்செயல்களினால் கொல்லப்பட்டோர் எனத் தெரிவித்து 2001 ஆம் ஆண்டு யாழ்.அரச அதிபரினால் வழங்கப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 167 பேரும் கொல்லப்பட்டுள்ளார்கள் என அரசு உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்த வேண்டும்.

★ எஞ்சியுள்ளோர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களைத் தெரியப்படுத்தி, அவர்களுடன் நாம் தொடர்பு கொள்ள ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

★ இவற்றுக்கான இறுதியும் உறுதியுமான முடிவை இச்சந்திப்பில் பங்குபற்றும் பிரதமரின் செயலாளர் எமக்கு வழங்கவேண்டும்.(ஜ-8)


இரசாயனவியல், பௌதிகஇரசாயனம்
அயன் சமநிலை
புதிய பிரிவு ஆரம்பம்
04.01.2003
SAT. 1.30 (N.T.)
BY:-சிவகுமார் (I.Che. M.C.)
BRIGHTMAN
பிறவுண்வீதி, நீராவியடி, யாழ்நகர். (12510)

2005 A/L
ஆரம்பம் 04.01.2003
சனி மாலை 3.00 p.m.
பௌதிகவியல் : P.மோகன்
கணிதம் : S.S.ரீகன்
வணிகக்கல்வி : S.ஜெகன்
அளவையியல் : ஜெயகநேசன்
கலைப்பிரிவு வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.
வர்த்தகக் கல்லூரி, சங்கானை. (12357)

DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI DSI
இலவசம்! இலவசம்!! இலவசம்!!!
பாடசாலை மாணவர்களுக்கு இலவசம்
நீங்கள் கொள்வனவு செய்யும்

DSI

பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்துக்கள் (SHOES)
ஒவ்வொன்றிற்கும் ஒரு நபர் செருப்பு இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
DSI பாதணிகளின் யாழ்.குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்
SUPER SHOES சுப்ப சூஸ்
(கல்யாணி கிறீம் ஹவுஸ் அருகில்)
இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (12134)

கோலாகலமான திறப்புவிழா
Mobitel
Now you're talking
இதோ இப்போது உங்கள் நகரத்திலே...
தெளிவான அழைப்பைப் பெறவும், சிறந்த பரிவர்த்தனை செறிவுக்கும், எங்கள் வலைப்பின்னலுடன் இணைந்து கொள்ளுங்கள்
Mobitel
யாழ்.மக்களுக்கு சேவைகளை வழங்க இன்று காலை 9 மணிக்கு சம்பிரதாயபூர்வமாக அலுவலகம் திறந்துவைக்கப்படுகிறது.
* மாதவாடகை 300 ரூபா மட்டுமே!
* மாதமுடிவில் கட்டணம் செலுத்த வசதி!
மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்
272, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.NO:- 222 3990 (C-25808)

NEW SCIENCE CENTRE
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர் (வெலிங்டன் சந்தி அருகில்).
A/L 2005
இலங்கை முன்னணி ஆசிரியர்களான:
திரு.S.P.நாகநாதன், திரு.குணசிங்கம்
யாழ்நகரின் முன்னணி ஆசிரியர்களுடன் இணைந்து ஆரம்பமாகிவிட்டது.
C-Maths.: திரு.குணசிங்கம், திரு.பிரதீபன், திரு.குமுக்கேசன்
CHE. : திரு.அன்பழகன் (அன்பு)
BIO. : திரு.நாகநாதன், திரு.தற்பரன்
PHY. : திரு.சிவலிங்கம், திரு.சந்திரப்பிரகாஸ்
S.P.நாகநாதன் கலந்துகொள்ளும் 25 மணித்தியால கருத்தரங்கு 06.01.2003
திங்கட்கிழமை ஆரம்பம். கட்டணம் 200/=, பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.
CHEMISTRY CENTRE
83, பலாலி வீதி, கந்தர்மடம்
A/L 2005
யாழ்., கொழும்பு முன்னணி ஆசிரியர்களுடன் இணைந்து ஆரம்பமாகிறது
C-Maths.: திரு.குணசிங்கம், திரு.பிரதீபன்
BIO. : திரு.நாகநாதன், திரு.தற்பரன்
CHE. : திரு.அன்பழகன்
PHY. : திரு.சிவலிங்கம்
(4709)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.01.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.